SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007


# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS

மாநிலம் பயனுற!

குரோதி வருடம் பங்குனி 13 | ஹிஜிரி 1446 ரமலான் 26

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews

● புதுச்சேரி ● வியாழக்கிழமை, மார்ச் 27, 2025 ● வெளியூர்: 28-3-2025, வெள்ளிக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 251 ● 8 பக்கம் ● ரூ.6


மல்டிகலர் பைகள்

துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

## தமிழக சட்டசபையில்

# வக்பு திருத்த மசோதாவுக்கு எதிராக தீர்மானம்

## மு.க.ஸ்டாலின் முன்மொழிந்தார்



சென்னை, மார்ச் 27-

மத்திய அரசு சமீபத்தில் வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தது. இந்த நிலையில், தமிழக சட்டசபையில் அந்த மசோதாவை கைவிட வேண்டும் என்று அரசினர் தீர்மானத்தை கொண்டுவர முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முடிவு செய்துள்ளார்.

இந்த நிலையில், வக்பு திருத்த மசோதாவுக்கு எதிரான தீர்மானத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் கொண்டு வந்து முன்மொழிந்தார். அப்போது முதல் அமைச்சர் பேசியதாவது:

இந்தியத் திருநாட்டில் மத நல்லிணக்கத்துடன் அனைத்து மதங்களைச் சார்ந்த மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். அனைத்து மக்களுக்கும் அவரவர் மதங்களைப் பின்பற்றுவதற்கு அரசமைப்புச் சட்டம் உரிமை வழங்கி இருக்கிறது. அதைப் பேணிக் காக்கும் கடமை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு உள்ளது.

ஆனால், அதற்கு மாறாக, சிறுபான்மையின இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில், 1995ம் ஆண்டின் வக்பு சட்டத்தினை திருத்துவதற்கு கடந்த 2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மத்திய அரசு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்பு திருத்தச் சட்ட முன்வடிவினை முழுமையாக திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது என்று கூறினார்.

## திருப்பூர் குமரனுக்கு மணிமண்டபம் அமைச்சர் சாமிநாதன்



சென்னை, மார்ச் 27-

தமிழக சட்டசபையின் இன்றைய கேள்வி பதில் நேரத்தின்போது சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார், ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் பிறந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிரை தியாகம் செய்த திருப்பூர் குமரனின் பிறந்த ஊரில் மணிமண்டபம் அமைக்கப்படும் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு விழாவில் அறிவித்தார். அந்த மணிமண்டபம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது? என்று கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த அமைச்சர் சுவாமிநாதன், திருப்பூர் குமரன் பிறந்த ஊரான சென்னிமலையில் முதல்அமைச்சரின் உத்தரவின் பேரில் துறையின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. முதலில் தேர்வு செய்யப்பட்ட இடம் சென்னிமலையிலிருந்து தூரமாக இருந்தது. சென்னிமலை பகுதியில் வேண்டும் என பொதுமக்கள் கேட்டார்கள்.

எனவே அறநிலையத்துறை அமைச்சரிடத்தில் முதலமைச்சர் அதற்கான உத்தரவை பிறப்பித்து சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சொந்தமான இடத்தில் வாடகை அடிப்படையில் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமான பணிகள் தொடங்கப்படும். என தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் வானிலை முன்னறிவிப்பில் இந்தி சேர்ப்பு

சென்னை, மார்ச் 27-

தென் இந்தியாவில் கேரளா, ஆந்திரா ஆகிய மாவட்டங்களில் ஆங்கிலத்துடன் வெளிவந்த நிலையில் தமிழகத்தில் மட்டும் முதன் முறையாக இந்தி மொழியுடன் சேர்த்து வானிலை அறிக்கை வெளியாகி உள்ளது. ஏற்கனவே தமிழகத்தில் இருமொழிக்கொள்கை தொடர்பாக சர்ச்சையாகி வரும் நிலையில் தற்போது சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பில் இந்தி மொழியும் சேர்க்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையம் சென்னை இணையதள பக்கத்தில் இந்தி மொழியும் சேர்க்கப்பட்டுள்ளது. வழக்கமாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிகள் மட்டுமே இடம்பெறும். தற்போது இந்தி மொழியும் சேர்க்கப்பட்டுள்ளது தமிழகத்தில் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய தலைவர் அமுதா கூறியிருப்பதாவது: சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பில் இந்தி மொழியை சேர்க்க இந்திய வானிலை ஆய்வு மையம் அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். இந்திய வானிலை மைய அதிகாரிகள் அறிவுறுத்தலால், இந்த மாற்றங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்தியில் முன்னறிவிப்பு வெளியிட சென்னை மையத்தில் மொழிப்பெயர்பாளரும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு அவர் கூறியுள்ளார். ஏற்கனவே மும்மொழிக்கொள்கை மிகப்பெரிய சர்ச்சையாகி இருக்கும் சூழலில், தற்போது மத்திய அரசு சார்பில் இந்திமொழியை சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது தமிழர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## 1,000 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்பும் பணி தொடக்கம்: ஆசிரியர் தேர்வு வாரியம்

சென்னை, மார்ச் 27-

தமிழ்நாடு அரசின் தொடக்கக் கல்வித்துறையில் காலியாக உள்ள 1,768 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கான தேர்வு ஜூலை 21ம் தேதி நடைபெற்றது. இந்தத் தேர்வுக்கு 26,510 பேர் விண்ணப்பம் செய்திருந்தனர். அதனை தொடர்ந்து 1,768 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுடன், கூடுதலாக 1,000 இடங்கள் சேர்த்து மொத்தம் 2,768 இடங்கள் நிரப்பப்பட உள்ளதாக ஆசிரியர் தேர்வு வாரியம் ஜூலை 16ம் தேதி அறிவித்தது. தற்போது, இட ஒதுக்கீடு வாரியாக 1,000 கூடுதல் இடங்கள் நிரப்பப்பட உள்ளதை குறிப்பிட்டு ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. காலியாக உள்ள ஆசிரியர்களுக்கான பணியிடங்களை நிரப்ப வேண்டும் என எதிர்கட்சிகள் அழுத்தம் கொடுத்த நிலையில் தற்போது இந்த பணியிடங்களை நிரப்புவதற்கான பணி தொடங்கிவிட்டது என்று தமிழக அரசின் ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பாசிட்வாக பார்க்கப்படுகிறது.

## மீண்டும் ஏறுமுகத்தில் தங்கம் விலை: பவுனுக்கு ரூ.320 உயர்வு

சென்னை, மார்ச் 27-

சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை பவுனுக்கு(சவரன்) ரூ.320 உயர்ந்துள்ளது. ஆபரணத்தங்கம் ஒரு கிராம் ரூ.8,235 க்கும், சவரன் ரூ.65,880க்கும் விற்பனையாகிறது. கிராமுக்கு ரூ. 40 அதிகரித்துள்ளது. சென்னையில் வெள்ளி விலை கிராமுக்கு ஒரு ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.111ஆக விற்பனையாகிறது.

தங்கம் விலை கடந்த சில நாட்களாகவே ஏற்ற இறக்கமாக உள்ளது. கடந்த 21 ஆம் தேதி முதல் தங்கம் விலை சரிந்து வந்த நிலையில், நேற்று சவரனுக்கு ரூ.80 அதிகரித்து அதிர்ச்சி கொடுத்தது. இந்த நிலையில், இன்றும் விலை உயர்வை சந்தித்து இருப்பது தங்க நகை வாங்குவோருக்கு அதிர்ச்சியை கொடுத்து இருக்கிறது.

## பழங்குடியினர் நல கல்லூரி மாணவியர் விடுதியில் ஆட்சியர் ஆய்வு



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச. உமா “உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின் கீழ், சேந்தமங்கலம் வட்டம், துத்திக்குளத்தில் தனியார் மண்டபத்தில் செயல்பட்டு வரும் பழங்குடியினர் நல கல்லூரி மாணவியர் விடுதியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

## காஷ்மீருக்கு முதல் முறையாக வந்தே பாரத் ரெயில் சேவை பிரதமர் மோடி அடுத்த மாதம் தொடங்கி வைக்கிறார்

ஸ்ரீநகர், மார்ச் 27-

ஜம்மு-காஷ்மீருக்கு முதல் முறையாக நேரடி ரெயில் சேவை தொடங்கப்பட உள்ளது. இதற்கான பணிகள் அனைத்தும் முடிவடைந்து விட்டது. அடுத்த மாதம் (ஏப்ரல்) 19ந்தேதி பிரதமர் மோடி இந்த ரெயில் போக்குவரத்தை தொடங்கி வைக்கிறார். கத்ரா மற்றும் ஸ்ரீநகர் பாரமுல்லா இடையே முதல் முறையாக வந்தே பாரத் ரெயில் இயக்கப்படலாம் என ரெயில்வே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த ரெயிலை பிரதமர் மோடி கொடி அசைத்து தொடங்கி வைக்கிறார்.

இந்த விழாவில் மத்திய ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ், காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, அம்மாநில முதல் மந்திரி உமர் அப்துல்லா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

பின்னர் பிரதமர் மோடி உலகின் மிக உயரமான செனாப் ரெயில் பாலத்தை பார்வையிட உள்ளார். கத்ராவில் நடக்கும் பிரமாண்ட பொதுக்கூட்டத்திலும் பிரதமர் மோடி கலந்து கொள்ள இருக்கிறார்.

## இன்று மீண்டும் 11 ராமேசுவரம் மீனவர்களை சிறைபிடித்த இலங்கை கடற்படை: விசைப்படகும் பறிமுதல்

ராமேசுவரம், மார்ச் 27-

ராமேசுவரத்தில் இருந்து கடலுக்கு செல்லும் மீனவர்களை எல்லை தாண்டியதாக இலங்கை கடற்படையினர் தொடர்ந்து சிறை பிடித்து வருகிறார்கள். கடந்த 2 மாதங்களில் மட்டும் 60க்கும் மேற்பட்ட மீனவர்களை கைது செய்துள்ள இலங்கை கடற்படை அவர்களின் விசைப்படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது.

இதனை கண்டித்து கடந்த மாதம் ராமேசுவரம் மீனவர்கள் காலவரையற்ற போராட்டம் நடத்தினர். மத்திய, மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் திருவோடு ஏந்தியும், கஞ்சி காய்ச்சியும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

அப்போது ராமேசுவரம் வந்த தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி, போராட்டத் தில் ஈடுபட்ட மீனவர்களை நேரடியாக சந்தித்து பேசினார்.மேலும் மத்திய, மாநில அரசுகளிடம் பேசி மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்த தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்து சென்றார்.

இதையடுத்து போராட்டத்தை கைவிட்டு கடலுக்கு சென்ற முதல் நாளிலேயே 4 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். இந்தநிலையில் இன்று அதிகாலை மேலும் 11 பேரை இலங்கை கடற்படை சிறை பிடித்து சென்றுள்ளது. அதுபற்றிய விபரம் வருமாறு:

ராமேசுவரத்தில் இருந்து நேற்று காலை மீன்துறை அலுவலக அனுமதிச்சீட்டு பெற்று 400 விசைப்படகுகளில் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

இன்று அதிகாலையில் அவர்கள் வடக்கு கடல் பகுதியில் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டு இருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினரை பார்த்து அதிர்ச்சி அடைந்த மீனவர்கள் உடனடியாக அங்கிருந்து புறப்பட்டனர்.

இருந்தபோதிலும் வேர்க்கோடு பகுதியைச் சேர்ந்த ஜெர்சிஸ் என்பவருக்கு சொந்தமான விசைப்படகை சுற்றிவளைத்த இலங்கை கடற்படையினர் அதில் இருந்த பாம்பனை சேர்ந்த பாக்கியராஜ் (வயது 38), சவேரியார் அடிமை (35), முத்துகளஞ்சியம் (27), எபிரோன் (35), ரஞ்சித் (33), இன்னாசி (25), கிறிஸ்து (45), ஆர்னாட் ரிச்சே (36), ராமேசுவரத்தை சேர்ந்த பாலா (38), தங்கச்சிமடத்தை சேர்ந்த யோவான்ஸ் நானன் (36), அந்தோணி சிசோரியன் (43) ஆகிய 11 பேரையும் சிறைபிடித்தனர்.

மேலும் அந்த படகில் மீனவர்கள் பிடித்து வைத்திருந்த விலை உயர்ந்த இறால் உள்ளிட்ட மீன்களையும் பறிமுதல் செய்துகொண்ட இலங்கை கடற்படையினர், அவர்கள் மீது எல்லை தாண்டியதாக வழக்குப்பதிவு செய்தனர். பின்னர் 11 பேரிடம் இலங்கையில் உள்ள காங்கேசன்துறை மீன்துறை அலுவலகத்தில் விசாரணை நடத்தப்பட்டது.

முதற்கட்ட விசாரணைக்கு பின்னர் மீனவர்கள் 11 பேரும் ஒரு விசைப்படகுடன் மயிலட்டி மீன்பிடி துறைமுகத்தில் வைத்து யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுகிறார்கள். பின்னர் ஊர்க்காவல் படை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்படுவார்கள் என என இலங்கை கடற்படை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் பிரச்சனை தொடர்பாகவும், இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை சந்திக்கவும் இரு நாட்டு நல்லெண்ண அடிப்படையில் ராமேசுவரத்தில் இருந்து கடந்த சில தினங்களுக்கு முன்பு விசைப்படகு மீனவர் சங்க தலைவர் சேசுராஜா தலைமையில் 5 பேர் இலங்கை சென்றுள்ளனர். நேற்று யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை சந்தித்து பேசிய நிலையில் இன்று மீண்டும் 11 ராமேசுவரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து சென்றுள்ளனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
• வியாழன் • மார்ச் 27, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# வளர்ச்சித்திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆட்சியர் ஆய்வு



**நாமக்கல், மார்ச் 27–**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகராட்சி, வரகூராம்பட்டி, பட்டேல் நகர் மற்றும் அணிமூர் உள்ளிட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா வளர்ச்சித்திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் நீண்ட காலமாக வசித்து வரும் மக்களின் கனவை நினைவாக்கும் வகையில் வீட்டுமனை பட்டா வழங்கும் உன்னத திட்டத்தை செயல்படுத்தி உள்ளார்கள். குறிப்பாக நகர்புற பகுதியில் 5 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் மக்களுக்கு ஒருமுறை பட்டா வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி உள்ளார்கள். இத்திட்டத்தில் 5 ஆண்டுகளுக்கு மேலாக வசிக்கும் மக்கள் குறித்து கணக்கெடுப்பு பணியானது குடும்ப அட்டை, வீட்டுவரி ரசீது, குடிநீர் கட்டண ரசீது, மின் கட்டண ரசீது ஆகிய ஆவணங்களை அடிப்படையாக கொண்டு கணக்கெடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. நாமக்கல் மாவட்டத்தில் சுமார் 1,189 குடியிருப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. அவ்வாறு கண்டறியப்பட்டுள்ள குடியிருப்புகளில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோர் அடங்கிய குழு முதற்கட்டமாக ஆய்வு மேற்கொள்ளும் அதனைத்தொடர்ந்து, வருவாய் கோட்டாட்சியர்கள் பயனாளிகளின் ஆவணங்களை ஆய்வு மேற்கொள்ள உள்ளார்கள். பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரால் மேல் ஆய்வு செய்யப்படும்.

இத்திட்டம் நகர்புறத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இராசிபுரம் நகராட்சி, நாமக்கல் மாநகராட்சி, திருச்செங்கோடு நகராட்சி பகுதிகளில் பட்டா வழங்குவது குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதற்கட்டமாக திருச்செங்கோடு பகுதியில் 52 பட்டாக்கள் வழங்க கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்றைய தினம் திருச்செங்கோடு நகராட்சி 25வது வார்டு பகுதியில் களஆய்வு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. நில மதிப்பு குறித்து பத்திர பதிவு அலுவலகத்தில் தரவு பெறப்பட்டு, நில மதிப்பு ரூ.5 கோடி வரை இருப்பின் மாவட்ட அளவில் பட்டா வழங்கப்படும், விலை உயர்வாக இருப்பின் மாநில குழுவிற்கு அனுப்பப்படும்.

வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து முதல் கலந்தாய்வு கூட்டம் 28.3.2025 அன்று நடைபெற உள்ளது. இக்குழுவில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், 2 வருவாய் கோட்டாட்சியர்கள், நில எடுப்பு தனி மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) உள்ளிட்டவர்கள் இடம் பெறுவார்கள். முதற்கட்டமாக திருச்செங்கோடு பகுதியில் பயனாளிகளுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் கள ஆய்வு பணிகள் முடிக்கப்பட்டு தகுதிவாய்ந்த பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் பட்டா வழங்கும் பணியை தொடங்கி வைத்த பிறகு நாமக்கல் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பட்டாக்களை வழங்குவார்கள் என தெரிவித்தார்.

தொடர்ந்து, திருச்செங்கோடு நகராட்சி, வரகூராம்பட்டி, பட்டேல் நகர் அடுக்குமாடி குடியிருப்புக்கு பகுதியில் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டு, சுத்திகரிப்பு நிலையத்தின் திறன் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், திருச்செங்கோடு வட்டம், அணிமூரில் செயல்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை வளாகத்தில் உயிரி உரம் தயாரிக்கும் பணிகளை பார்வையிட்டு, மட்கும் மற்றும் மட்காத குப்பைகள் தரம் பிரிப்பது குறித்தும், பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுவது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். மேலும், தினசரி இப்பகுதியில் சேகாரமாகும் குப்பையின் அளவு குறித்தும் அலுவர்களிடம் கேட்டறிந்தார்.

# ஆத்தூர் அரசு மருத்துவர், செவிலியர்களுக்கு நன்றி தெரிவித்த பெற்றோர்கள்



**திண்டுக்கல், மார்ச் 27–**

திண்டுக்கல் மாவட்டம் சுரக்காய்பட்டி தோட்டத்து பண்ணைக்குட்டை தண்ணீரில் மூழ்கி உயிருக்கு ஆபத்தான நிலையில், வனராஜ்–யமுனா மகன் குருவரதன் மற்றும் ஆனஸ்டராஜ்–துர்காதேவி மகன் குருமுகிலன் ஆகிய இரண்டு சிறுவர்களையும் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு வந்திருந்தனர். அப்போது, பணியில் இருந்த குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர்.அரவிந்த் நாராயணன் மற்றும் செவிலியர்கள் துரிதமாக முதலுதவி சிகிச்சையை மேற்கொண்டு குழந்தைகளை ஆபத்தான நிலையிலிருந்து மீட்டு, உடனடியாக, 108 ஆம்புலன்ஸ் வாகனத்தின் மூலமாக திண்டுக்கல் மருத்துவக் கல்லூரி மருத் துவமனை குழந்தைகள் நல சிறப்பு பிரிவுக்கு அனுப்பிவைத்து, தொடர் கண்காணிப்பை மேற்கொண்டனர்.

குழந்தைகள் இருவரும், மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவ மனையிலிருந்து முழுமையான சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில், ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு வருகை தந்த குழந்தைகளின் பெற்றோர்கள், துரிதமாக முதலுதவி சிகிச்சையை மேற்கொண்டு, இரண்டு குழந்தைகளின் உயிரை காப்பாற்றிய மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கு கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். பெற்றோர்களுக்கு ஆறுதல் கூறிய, முதன்மை மருத்துவ அலுவலர் மரு.அரவிந்த் நாராயணன் குழந்தைகளின் பாதுகாப்பு நலன் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அக்கறையோடு எடுத்துரைத்தார். இதனைப் பார்த்த பலரும், மருத்துவர் மற்றும் செவிலியர்களை கௌரவித்தனர்.

# விக்கிரவாண்டி-கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலை பணிகள் விரைந்து மேற்கொள்ள நடவடிக்கை: அமைச்சர் எ.வ.வேலு

**சென்னை, மார்ச் 27–**

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, விக்கிரவாண்டி முதல் கும்பகோணம் வரை உள்ள தேசிய நெடுஞ் சாலை பணிகள் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் எ.வ.வேலு, “நீண்ட காலமாக இந்தப் பணிகள் நடந்து வருகிறது. தற்போது டெண்டர் விடப்பட்டு ஒரு நிறுவனம் அதை எடுத்துள்ளது. எனவே இந்த சாலைப்பணிகளை விரைந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்“ என்று தெரிவித்தார்.



# கர்ப்பிணிகள் பிரசவங்களை அரசு மருத்துவமனைகளில் திட்டமிட ஊக்கப்படுத்த வேண்டும்

## ஆட்சியர் அழகுமீனா அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்

**கன்னியாகுமரி, மார்ச் 27–**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் அழகுமீனா தலைமையில் அரசு மருத்துவமனைகளில் பிரசவங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாக மருத்துவர்கள், துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்: அனைத்து கிராம சுகாதார செவிலியர்களிடம் கர்ப்பிணி தாய்மார்களை பதிவு செய்யும் பொழுது அவர்களின் பிரசவத்தினை திட்டமிட்டு அதனை றிமிசிவிணி போர்ட்டலில் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டது. சிக்கலான கர்ப்பிணி தாய்மார்களின் பிரசவங்களை 24x7 விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையத்தில் மட்டுமே திட்டமிடும்படியும், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொள்ளும் சிக்கலான கர்ப்பிணி தாய்மார்களின் பிரசவங்கள் நிலை இரண்டு அல்லது நிலை மூன்று வசதிகள் அடங்கிய தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே தேர்வு செய்யும்படியும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு கிராம சுகாதார செவிலியர்கள் அறிவுறுத்த வேண்டும்.





கர்ப்பிணி பெண்கள் அனைவரும் பயன்பெறும்படி, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் கர்ப்பகால பரிசோதனை தினங்களில் பெண் மருத்துவர்கள் இருக்கும் வண்ணம் மாவட்ட நிர்வாகம் ஏற்பாடுகள் செய்துள்ளது. அனைத்து காப்பிணி பெண்களின் பிரசவங்கள் திட்டமிட்ட இடத்தில் நடைபெற ஏதுவாக கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் பகுதி சுகாதார செவிலியர்கள் அவர்களை முறையாக தொடர்கண்காணிப்பில் வைக்க அறிவுறுத்தப்பட்டனர்.

அனைத்து கிராம சுகாதார செவிலியர்களுக்கு மாதம் இரண்டு பிரசவங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களிலோ, அரசு மருத்துவ மனைகளிலோ அல்லது அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலோ நடைபெற இலக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருந்து கர்ப்பிணி பெண்களை அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவம னைக்கு, அழைத்து சென்று, அங்கு வழங்கப்படும் சேவைகளை விளக்குவதற்காக, ஆரம்ப சுகாதார நிலையங்கள் அதற்கான அட்டவணை தயார் செய்து அதன்படி அழைத்துச் செல்ல அறிவுறுத்தப்பட்டது. கிராம சுகாதார செவிலியர்கள் மூலம் அழைத்துச் செல்லப்படும் கர்ப்பிணி பெண்கள் நேரடியாக அரசு மருத்துவமனைக்கு மற்றும் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ மனைகளில் தேவையில்லாமல் காக்க வைக்காமல் நேரடியாக மருத்துவரை அணுகலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கர்ப்பிணி பெண்கள் தேவையற்ற அலைச்சலை தவிர்ப்பதற்காக ஆய்வகம் மற்றும் ஸ்கேன் செய்யும் இடம் ஆகிய அனைத்தும் கட்டிடத்தில் இயங்க முதல்வர் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் அரசு மருத்துவமனைகள் தங்களிடம் ஏதேனும் சிக்கல் காரணமாக பரிந்துரைக்கப்பட்டு வரும் கர்ப்பிணி பெண்களுக்கு தேவையான பரிசோதனைகள் செய்யாமல் நேரடியாக மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்வதை தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டது. மேலும் அனைத்து வட்டாரங்களில் Mentor Ogicians உடனடியாக நியமிக்கப்பட்டு வட்டாரத்தில் உள்ள அனைத்து சிக்கலான கர்ப்பிணி பெண்களை மாதம் ஒரு முறை பார்வையிட்டு அவர்கள் விரிவான அவசரக்கா லமகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை மையத்தில் பிரசவங்களை மேற்கொள்ள பரிந்துரை செய்ய துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது.

தொடர்ந்து அரசு மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கை குறைந்ததற்கான காரணங்களை கண்டறிய மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கை அனைவருக்கும் எடுத்துக்கூறப்பட்டது. ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு தெரிவித்தார்கள்.

கூட்டத்தில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் ராமலெட்சுமி, மாவட்ட சுகாதார அலுவலர், துணை இயக்குனர் (குடும்ப நலம்) மற்றும் இணை இயக்குனர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்), அனைத்து வட்டாரங்களில் உள்ள வட்டார மருத்துவ அலுவலர்கள், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள், சமுதாய செவிலியர்கள், பகுதி சுகாதார செவிலியர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# புதுச்சேரி மாநகராட்சியாக தரம் உயர்கிறது பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு மீண்டும் வேலை

## முதலமைச்சர் ரங்கசாமி அதிரடி அறிவிப்பு

**புதுச்சேரி, மார்ச் 27–**

புதுச்சேரி சட்டப்பேரவையில் நேற்று எம்.எல்.ஏ.,க்களின் விவாதங்களுக்கு பதில் அளித்து பேசிய முதலமைச்சர் ரங்கசாமி, அரசு ஊழியர்களுக்கு பல்வேறு சலுகைகளையும், அறிவிப்புகளையும் வெளியிட்டார்.



சட்டசபையில் பட்ஜெட் மற்றும் மானிய கோரிக்கைகள் மீதான விவாதத்தில் எம்.எல்.ஏ.,க்களின் கேள்விகளுக்கு முதலமைச்சர் ரங்கசாமி பதில் அளித்து பேசும் போது கூறியதாவது, பட்ஜெட் மற்றும் மானிய கோரிக்கைகள் மீது எம்.எல்.ஏ.,க்கள் கூறிய கருத்துகளை ஏற்று செயல்படுத்த அரசு தயாராக உள்ளது. நிர்வாகம் எவ்வாறு உள்ளது என்பது அனைவருக்கும் தெரியும். நிர்வாக சீர்திருத்தங்களை அரசு மேற்கொண்டு வருகிறது, புதிய சட்டசபை கட்ட வேண்டும் என்பது அரசின் எண்ணம், அதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

சுகாதாரத்துறையில் காலி பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. என்.ஆர்.எச்.எம்., ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய மத்திய அரசு ஒப்புக் கொள்ளவில்லை. எனவே, சம்பளம் உயர்த்தி கொடுத்துள்ளோம்.

செவிலியர்களுக்கு ரூ.11 ஆயிரத்தில் இருந்து ரூ. 26 ஆயிரமாக சம்பளம் உயர்த்தப்படும். சமூக பணி யாளர்களுக்கு ரூ.12 ஆயிரமும், அதற்கு கீழ் உள்ளவர்களுக்கு ரூ.10 ஆயிரம் உயர்த்தி வழங்கப்படும். உதவி மகப்பேறு செவிலியர்களுக்கு 8,400ல் இருந்து 20,400 ரூபாயாக உயர்த்தப்படும்.

பொதுவாக ரூ. 15 ஆயிரத்திற்கு கீழ் ஊதியம் வழங்க கூடாது என்பது அரசின் எண்ணம். அதனடிப்படையில், ஆஷா பணியாளர்கள், பொதுப்பணித்துறை வவுச்சர் ஊழியர்கள், ரொட்டிபால் ஊழியர்களுக்கு ஊதியம் உயர்த்தி கொடுத்துள்ளோம். ஆஷா பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஊதியத்துடன் ரூ.10 ஆயிரம் சேர்த்து ரூ. 18,000 வழங்கப்படும். புதிதாக 12 ஆம்புலன்ஸ்கள் வாங்கப்பட்டுள்ளது. டிரைவர் பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுத்து வருகிறோம். லிங்காரெட்டிப் பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை தனியார் பங்களிப்புடன் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. காரைக்கால் மதர் தெரேசா கல்லூரியில் காலி பணியிடம் விரைவில் நிரப்பப்டும்.

கொம்யூன் பஞ் சாயத்து ஊழியர்கள் 196 பேரை பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். பொதுப்பணித்துறையில் 119 வவுச்சர் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்வதற்கான கோப்பு கவர்னரிடம் உள்ளது. விரைவில் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் பணியில் இருந்து நீக்கப்பட்ட 156 பேருக்கு மீண்டும் வேலை வழங்கப்படும். மேலும் 20 ஆண்டுகளுக்கு மேலாக குறைந்த சம்பளத்தில் பணியாற்றும் டெக்னிஷியன்களை பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். பொதுப்பணித்துறையில் பணியில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் பணி வழங்கி மாதம் ரூ. 10,000 ஊதியம் வழங்கப்படும்.

குடிசை மாற்று வாரியத்தில் கல்வீடு கட்டும் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்த உள்ளோம். இதற்காக பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். எனவே, அங்கு ஏற்கனவே பணிபுரிந்து நீக்கப்பட்ட ஊழியர்களுக்கு மீண்டும் பணி வழங்கப்படும். பாட்கோவை தலை நிமிர வைத்து அதிலும் நீக்கப்பட்ட ஊழியர்களுக்கு பணி வழங்கப்படும். பி.டி.டி.சி., போன்ற நிறுவனங்களில் நிர்வாகம் சரியாக நடைபெற்றால் அவற்றிற்கு வேண்டியதை அவர்களே செய்து கொள்ளலாம்.

புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிகளோடு, அரியாங்குப்பம். வில்லியனூர் ஒட்டிய நகர அமைப்பு பகுதிகளை இணைத்து புதுச்சேரி மாநகராட்சி உருவாக்கப்படும். இதனால் நிதி ஆதாரம் மேம்படும். நகர அமைப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முடியும். இடுகாடுகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மாதம் நல்வாழ்வு ஊதியமாக ரூ. 3,000 வழங்கப்படும். இதன் மூலம் 600 குடும்பங்கள் பயன்பெறும்.

ஓ.சி.எம்.,பணியாளர் களை நிரந்தரம் செய்வது குறித்து தலைமை செயலரிடம் பேசி உள்ளேன். ஏற்கனவே சட்டசபை பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். அந்த விதிகளை பின்பற்றி பணி நிரந்தரம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கருணை அடிப்படையில் விண்ணப்பித்த வாரிசுதாரர்களுக்கு எம்.டி.எஸ்., ஆக பொதுப் பணித்துறையில் பணி வழங்கி உள்ளோம்.

சுகாதாரத்துறை யிலும் வழங்கி வருகிறோம். அது போல் பிற துறைகளில் உள்ள வாரிசுதார்களுக்கு ஒரு முறை தளர்வு அடிப் படையில் பணி வழங்க கோப்பு தயாராகி உள்ளது. விரைவில் அவர்களுக்கும் பணி வழங்கப்படும்.

எம்.எல்.ஏ.,க்கள் என்ன நினைக்கிறார்களோ அதை எல்லாம் செய்து கொடுக்கும் வகையில் முனைப்போடு அரசு செயல்பட்டு வருகிறது. தேர்தலுக்கு ஒரு ஆண்டு மட்டுமே இருப்பதாக நினைக்கலாம். ஆனால், 6 மாதத்திற்குள்ளே நிச்சயமாக விரைவாக செயல்பட்டு அறிவித்த அனைத்தையும் நிறைவேற்றுவோம்.

இவ்வாறு முதலமைச்சர் ரங்கசாமி பதில் அளித்து, அறிவிப்புகளை வெளியிட்டார்.

# ஒட்டன்சத்திரத்தில் இறகுபந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு



ஒட்டன்சத்திரம், மார்ச் 27-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் இந்திய மருத்துவ கழகம் சார்பில் உலக காசநோய் ஒழிப்பு விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு இரட்டையர் இறகு பந்து விளையாட்டு போட்டி மற்றும் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு டாக்டர்.ஏ.ஆசைத்தம்பி தலைமை வகித்து, உலக காசநோய் ஒழிப்பு விழிப்புணர்வு கருத்துக்களை விளையாட்டு வீரர்களிடம் எடுத்துரைத்தார். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இந்திய மருத்துவ கழக ஒட்டன்சத்திரம் கிளை துணைத்தலைவர் டாக்டர்.முத்துச்சாமி பரிசுகளை வழங்கினார்.

# வளத்தி ஊராட்சியில் திமுக சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு




வளத்தி, மார்ச் 27-

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஒன்றியம், வளத்தி ஊராட்சியில் திமுக சார்பில் கோடை வெயிலை முன்னிட்டு நீர் மோர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சி மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஒன்றிய குழு பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் கலந்து கொண்டு வளத்தி ஊராட்சியில் அமைக்கப்பட்டிருந்த நீர் மோர் பந்தலை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து அவர்களுக்கு இளநீர், தர்பூசணி, வெள்ளரிக்காய், கூல்ட்ரிங்ஸ் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நாராயணமூர்த்தி, சாந்தி சுப்லீரமணி மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், ஒன்றிய அவை தலைவர் மண்ணு ஏழுமலை,ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற தலைவர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் இளைஞரணி துணை அமைப்பாளர் தயாநிதி மற்றும் கட்சி நிர்வாகிகள்,மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பொது இடத்தில் பன்றிகளை திரியவிட்டால் பறிமுதல் செய்யப்படும்

## காரைக்கால் நகராட்சி ஆணையர் எச்சரிக்கை

காரைக்கால், மார்ச் 27-

பொது இடத்தில் பன்றிகளை திரிய விட்டால், உடனே பறிமுதல் செய்யப்படும். திருப்பி வழங்கப்படாது, என காரைக்கால் நகராட்சி ஆணையர் சத்யா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காரைக்கால் நகராட்சி ஆணையர் சத்தியா இது குறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: காரைக்கால் மாவட்டத்தில் உள்ள விவசாய நிலம், பொது இடம் மற்றும் சாலையில் போக்குவரத்துக்கு இடையூறாக பன்றிகள் அதிக அளவில் திரிவதாக பிறந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படுவதும் தெரிய வருகிறது. மேலும் விளைநிலங்கள் மற்றும் தானியங்கள் பெருமளவில் பாதிக்கப்படுவதாக விவசாயிகளிடமிருந்து மனுக்கள் வந்தவண்ணம் இருக்கிறது. இதற்கு முன்பாக பலமுறை எச்சரித்தும் யாரும் பன்றிகளை உரிய இடத்தில் பாதுகாப்பான முறையில் வளர்ப்பதில்லை. எனவே பன்றி வளர்ப்போர் இந்த அறிவிப்பை இறுதி எச்சரிக்கையாக கருதி, ஒரு வாரகால கெடுவிற்குள் பன்றிகளை வெளியில் திரிய விடுவதை நிறுத்திக்கொண்டு, அதற்கான பட்டியில் அடைத்து வளர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. தொடர்ந்து சாலைகளிலும், பொது இடங்களிலும், விளைநிலங்களிலும் திரியும் பன்றிகள் பிடிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்படும். அவை மீண்டும் தரப்படமாட்டாது. அது மட்டும் இன்றி பன்றி வளர்ப்போர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும், என இதன் மூலம்என்றும் எச்சரிக்கப்படுகிறது. மேலும், பன்றி வளர்ப்போர்கள் தங்களுடைய பெயர் மற்றும் தொலைபேசி எண், பன்றி வளர்க்கும் இடத்தின் புகைப்படம் மற்றும் பன்றிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை காரைக்கால் கால்நடை பராமரிப்புதுறை இணை இயக்குனரிடம் சமர்ப்பித்து பதிவு செய்துகொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

# கேஎஸ்பி ரமேஷ் எம்எல்ஏ பிறந்தநாள் விழா



கதிர்காமம் தொகுதி என்.ஆர் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.பி ரமேஷ் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா நடைபெற்றது. கே.எஸ்.பி ரமேஷ் எம்.எல்.ஏ பிறந்தநாள் விழா நிகழ்ச்சியை கே.எஸ்.பி பேரவை தலைவர் சதீஷ் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த விழாவில் எம்.எல்.ஏ கலந்து கொண்டு 750க்கும் மேற்பட்டவர்களுக்கு சிக்கன் பிரியாணி வழங்கினார். மேலும் 200 பெண்களுக்கு புடவை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பிறந்தநாள் விழாவில் ஆறுமுகம், நீல மேகம், இளங்கோ, ரஜினிகாந்த், போற்றி தாஸ், வடிவேல், கீர்த்தி வாசன், சுதாகர், தேவா, முத்துக்குமரன், மோகன், மாரிமுத்து, தமிழரசன், சிலம்பரசன் மற்றும் கே.எஸ்.பி பேரவை நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# பெண் குழந்தைகள் பாதுகாப்பில் முக்கிய பங்காற்றிய 30 சாதனையாளர்களுக்கு விருது



நாமக்கல், மார்ச் 27-

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சாலை, கோஸ்டல் ரெசிடென்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்ட நோக்குநிலை கூட்டத்தில் பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பில் பங்கெடுத்த 30 சாதனையார்களுக்கு விருதுகளை வழங்கினார்.

நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தாவது, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்ட நோக்குநிலை கூட்டம் இன்றைய தினம் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியானது பல்வேறு அரசுத்துறைகள் ஒன்றிணைந்து செயல்பட்டு வருகின்றன என்பதற்கு சான்றாகும். குறிப்பாக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணியாளர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கிராம ஊராட்சி அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர். கிராம சுகாதார பணியாளர்கள், மருத்துவ பணியாளர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து பெண் குழந்தைகள் பாதுகாப்பில் முக்கிய பங்காற்றி வருகின்றார்கள். கிராம செவிலியர்களுக்கு தாய், சேய் நலன் காப்பதிலும், ஊட்டச்சத்தை மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு உண்டு. மேலும், குழந்தைகள் தினந்தோறும் தங்கள் பெற்றோருடன் இருப்பதை விட காலை 8.30 மணி முதல் மாலை 6 மணி வரை பள்ளியில் ஆசிரியர்களுடன் தான் அதிக நேரம் உள்ளார்கள். எனவே, குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானதாகும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் நேரம் ஒதுக்கீடு செய்து அவர்களுடன் உரையாட வேண்டும். குழந்தைகளுக்கு தொடுதலில் நல்லது கெட்டது என பகுப்பாய்வு செய்திட பெற்றோர்கள் கற்றுக்கொடுக்க வேண்டும். நல்ல ஆரோக்கியமான உணவை ஆண், பெண் குழந்தைகளுக்கு வேறுபாடின்றி பெற்றோர்கள் வழங்கிட வேண்டும். பெண் குழந்தைகளுக்கு சிறு வயதிலிருந்தே பேச வாய்ப்பளிக்க வேண்டும்.

பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் முக்கிய நோக்கமானது பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சமுதாயம் உள்ளதை உறுதி செய்வதும், கருவில் உள்ள குழந்தையின் பாலினம் குறித்து பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்படுகிறதா என்பதை கண்டறிவதாகும். பெண் குழந்தைகளுக்கு எதிரான மனநிலை சமூகத்தில் உள்ளதா என்பதை கண்டறிந்து அதை போக்கிட வேண்டும். பாலின வேறுபாடு காரணமாக கருக்கலைப்பு உள்ளிட்ட தவறான செயல்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆண், பெண் இருபாலரும் சமம் என்பதை அனைவரும் உணர வேண்டும். பெண்கள் தற்போது அனைத்து துறைகளிலும் சாதித்து வருகின்றார்கள். குறிப்பாக விண்வெளி ஆராய்ச்சிகளில் கூட பெண்கள் சாதனை புரிந்து வருகின்றார்கள்.

நாமக்கல் மாவட்டத்தில் ஆண் குழந்தைகளின் பிறப்பை விட பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் அதிகமான இருந்தாலும் சில இடங்களில் பாலின வேறுபாடு காணப்படுகிறது. பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைந்தால் சமுதாய சீர்கேடு ஏற்படும். திருமணம் மற்றும் வாழ்க்கை முறையில் ஒழுக்ககேடு ஏற்படும். எனவே, பெண் குழந்தைகள் பிறப்பு மற்றும் பாதுகாப்பில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

தமிழ்நாடு அரசு சார்பில் போதை பொருள் பயன்பாட்டை தடை செய்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. ஒரு கிராமம் என்பது அங்கன்வாடி பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள், ஊராட்சி தலைவர்கள் ஒருங்கிணைந்தது தான். இவர்களை தாண்டி புதியதாக யாரும் கிராமத்திற்குள் வந்து செல்ல முடியாது. எனவே, தங்கள் பகுதியில் புதிய நபர்களின் நடமாட்டம் மற்றும் போதை பொருள் பயன்பாடு உள்ளாத என்பதை கண்காணிக்க வேண்டும். நாமக்கல் மாவட்டத்தை போதை பொருள் இல்லா மாவட்டமாக உருவாக்க ஒத்துழைக்க வேண்டும். நம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகள், 1 மாநகராட்சி, 4 நகராட்சிகள் மற்றும் 19 பேரூராட்சி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பில் முக்கிய பங்காற்றிய 10 கிராம ஊராட்சிகள், 5 கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் 5 அங்கன்வாடி பணியாளர்கள், பெண் குழந்தைகளின் நலனுக்காகவும் அவர்களின் கல்விக்காகவும் சிறப்பாக பணியாற்றிய 9 நபர்கள் மற்றும் குழந்தை திருமணத்தை தடுத்து நிறுத்திய 1 நபர் என மொத்தம் 30 நபர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) செல்வராசு, மாவட்ட சமூக நல அலுவலர் காயத்திரி, பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் சகுந்தலா, திட்ட அலுவலர் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் சசிகலா, நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் சாந்தா அருள்மொழி, மாவட்ட மனநல திட்ட ஆற்றுபடுத்துநர் அர்ச்சனா, மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழ வழக்கறிஞர் சரண்யா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# போதைப் பொருள் விழிப்புணர்வு மற்றும் மறுவாழ்வு சம்பந்தமாக தனியார் மருத்துவக் கல்லூரிகளுடன் கலெக்டர் குலோத்துங்கன் ஆலோசனை

புதுச்சேரி, மார்ச் 27-

புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும் மறுவாழ்வு சம்பந்தமாக புதுச்சேரியில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளின் முதல்வர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஒவ்வொரு தனியார் மருத்துவக் கல்லூரியும் ஐந்து கிராமங்களை தத்தெடுத்து போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் தொடர்பாக அங்குள்ள மக்களுக்கும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும். இதன் பொருட்டு தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஒரு ஒருங்கிணைப்பாளரை நியமிக்க வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் கேட்டுக்கொண்டார்.

மேலும், போதைப்பொருள் பயன்படுத்துவதால் உடல் உறுப்புகளுக்கு ஏற்படும் தீங்குகளை விளக்கும் வகையில் இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள காட்சியகத்தைப் போல மற்ற மருத்துவ கல்லூரிகளிலும் அமைக்குமாறு தனியார் மருத்துவ கல்லூரி நிர்வாகத்திடம் கேட்டுக் கொண்டார்.

அனைத்து தனியார் மருத்துவக் கல்லூரி வளாகங்களும் போதை பொருட்களற்ற வளாகங்களாக விளங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் எடுக்க வேண்டும் எனவும் கலெக்டர் குலோத்துங்கன் அறிவுறுத்தினார்.



# மத்திய தொழிற்சாலை பாதுகாப்பு படை குழுவின் சைக்கிள் பயணத்திற்கு கவர்னர், முதலமைச்சர், சபாநாயகர் வரவேற்பு




புதுச்சேரி காந்தி சிலை அருகில் மத்திய தொழிற்சாலை பாதுகாப்பு படையின் இந்திய தேசத்தின் 9 மாநிலங்கள் 125 படைவீரர்கள் (ஆண், பெண்) இருபாலரும் 6654 கி.மீ., சைக்கிள் பயணத்தின் வருகை நிகழ்வானது நடை பெற்றது. கவர்னர் கைலாஷ்நாதன், முதலமைச்சர் ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன் மற்றும் காவல்துறை தலைவர் உள்ளிட்டோர் கலந்து கொண்ட நிகழ்வு கடற்கரை காந்தி திடலில் நேற்று நடைபெற்றது.

# ஆதிதிராவிட மாணவர்களுக்கு பள்ளி, கல்லூரி படிப்புகள் அனைத்தும் இலவசமாக செயல்படுத்த அரசு முடிவு

## அமைச்சர் சாய் ஜெ. சரவணன் குமார் சட்டசபையில் பெருமிதம்



**புதுச்சேரி, மார்ச் 27-**

புதுச்சேரி சட்டசபையில் மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சாய் ஜெ. சரவணன்குமார் பதில் அளித்து பேசியதாவது , ஆதிதிராவிடர் நலத்துறையில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களில் பயன்பெற வருமான உச்சவரம்பு ரூ. 8 லட்சமாக உயர்த்தப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி மூலம் ஆட்டோ ஓட்ட உரிமம் பெற்ற பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மின் ஆட்டோ வாங்க மானியம் வழங்க வரவு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசு ஒப்புதலுக்கு அனுப்பி உள்ளோம். இது விரைவில் அமலுக்கு வரும். பள்ளர்கள், சக்கிலியர்கள் சமூகத்தினரின் கோரிக்கையை ஏற்று தேவேந்திர குல வேளாளர், அருந்ததியர் என பெயர் மாற்றம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அம்பேத்கர் தொடர்புடைய இந்தியாவில் 4 தலங்களுக்கு ஆண்டுதோறும் செல்ல அம்பேத்கர் யாத்ரா அரசு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அமலுக்கு வரும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இறந்தால் இறுதி சடங்கிற்கான நிதி உதவி ரூ. 15 ஆயிரத்தை ரூ.25 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

ஒன்று முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ. 1500ல் இருந்து ரூ. 5000 ஆகவும், 6 முதல் 8ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ரூ.2,000 இருந்து ரூ.8,000 ஆக உயர்த்த அரசாணை வெளியிடப்படும்.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் உயர் மருத்துவ சிகிச்சை செய்ய (பைபாஸ் சர்ஜரி) புதுச்சேரி மருத்துவர் நிவாரண சங்கத் திட்டத்துடன் இணைந்து ரூ. 3 லட்சம் நிதி உதவி வழங்க கோப்பு அனுப்பியுள்ளோம். விரைவில் அரசாணை வெளியாகும்.

முதலமைச்சரின் புதுமைப்பெண் திட்டத்தில் பணிபுரியும் பெண்கள், கல்லூரி மாணவிகள் மின்சார இரு சக்கர வாகனம் வாங்க ரூ. 1 லட்சம் வரை வழங்க வரவு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசு ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளோம். விரைவில் அமலுக்கு வரும்.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் தங்கள் வீடுகளில் சோலார் மின் சக்தி அமைக்க 90 சதவீத மானியமாக அதிகபட்சம் ரூ. ஒரு லட்சம் வரை 200 பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

புத்தக சுமையை குறைக்க 5 முதல் 9ம் வகுப்பு மாணவர்களுக்கு ஆன்லைன் கற்றலுடன் கூடிய மென்பொருளுடன் கூடிய கைக் கணினி தர கோப்பு அரசுக்கு அனுப்பி உள்ளோம். அனுமதி கிடைத்தவுடன் அமலுக்கு வரும். ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு தனி அடையாள அட்டை வழங்க கோப்பு அனுப்பப்பட்டுள்ளது.

முதல்வரின் கிராமம் என்ற வரைவு திட்டம் தயாரித்து ஆதிதிராவிடர் பழங்குடியின மக்கள் 50 சதவீதத்திற்கு அதிகமாக வசிக்கும் 10 கிராமங்களை தேர்ந்தெடுத்து அடுத்த மூன்று ஆண்டிற்கு கிராம உள்கட்டமைப்பை மேம்படுத்த கிராமத்திற்கு ரூ. 50 லட்சம் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் 18 முதல் 40 வயது உள்ள பெண்கள் ரூ. 25 ஆயிரம் மானியத்துடன் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. வெளிநாட்டில் படிப்பதற்கான நிதி உதவி வழங்க வரவு திட்டம் அரசு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அமலுக்கு வரும்.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் உள்ள கோயில்களுக்கு வழங்கும் உதவித்தொகை ரூ. 10 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும். ஆதிதிராவிடர் நலத்துறை தகுதியான பயனாளிகளை கண்டறிந்து இலவச மனை பட்டா குடியிருப்பு தர நடவடிக்கை எடுக்கப்படும். 3,000 ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு இலவச மனை பட்டா வரும் ஆகஸ்ட் 15ம் தேதிக்குள் தரப்படும்.

காரைக்கால், மாகி, ஏனாமில் இலவச மனை பட்டா வழங்க, பட்டா பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

புதுச்சேரி கடற்கரை சாலை அம்பேத்கர் மணி மண்டபம் ரூ. 3 கோடியில் நவீன தொழில்நுட்பத்துடன் புனரமைக்கப்படும். பாட்கோவிற்கு விரைவில் நிரந்தர நிர்வாக இயக்குநர் நியமிக்கப்படுவார். சிறுபான்மையினர் ஏழை குடும்ப பெண்களுக்கு திருமண நிதி உதவி தரப்படும். தகுதியான சிறுபான்மையினருக்கு இலவச மனைப்பட்டா தரப்படும். ஹைமாஸ் விளக்குகள் புதிதாக அமைக்கப்படும்.

தகுதி வாய்ந்த ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு கல்வி உதவித் திட்டத்திற்கு மாணவர்கள் உயர்கல்வி கற்கும் விதத்தில் கல்லூரி படிப்புகள் அனைத்தும் இலவசக் கல்வித் திட்டத்தில் செயல்படுத்துகிறோம் இந்த கல்வியாண்டில் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 65 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் சாய் ஜெ. சரவணன்குமார் பதில் அளித்தார்.

# பத்தாம் வகுப்பில் முதல் மூன்று மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் விழா



**விழுப்புரம், மார்ச் 27-**

விழுப்புரம் மாவட்டம் அரசு உயர்நிலைப்பள்ளி மேலக்கொந்தை விக்கிரவாண்டி விழுப்புரம் மாவட்டம் மனிதம் காப்போம் அறக்கட்டளை சார்பாக தொடர்ந்து நான்காவது ஆண்டாக 2023 –24 கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பில் பொதுத் தேர்வில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 10,000 கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.. 2023–24 கல்வியாண்டில் 100% தேர்ச்சி பெற செய்ய காரணமாக இருந்த ஆசிரியர் பெருமக்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2024 – 25 கல்வியாண்டில் பொதுத் தேர்வு தயாராக இருக்கும் மாணவர்களுக்கு தேர்வு உபகரணங்கள் ரூபாய் 5000 மதிப்பில் வழங்கப்பட்டது நமது அறக்கட்டளை சார்பாக நான்காவது ஆண்டாக நடைபெற்ற முப்பெரும் விழாவில் மனிதம் காப்போம் அறக்கட்டளை நிறுவனர் சந்துரு வரவேற்பு உரையாற்றினார் நேதாஜி பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் திருநாவுக்கரசு சமூக ஆர்வலர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கண்ணன் வருவாய் ஆய்வாளர், பேபி பள்ளி மேலாண்மை குழு தலைவர், ஆசிரியப் பெருமக்கள் மற்றும் ஊர் பெரியவர்கள் தலைமை தாங்கினார் சிறப்பு அழைப்பாளர்களாக வைகுண்தவாசன் ஊரக வளர்ச்சித்துறை, சமூக ஆர்வலர்கள் குமார், கலிவரதன் , மற்றும் நமது அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர்கள் திரு கோபிநாத் செல்வகுமார் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர். மாணவர்களுக்கு கல்வி சார்ந்த விழிப்புணர்வும் மேலும் ஒழுக்கம், கல்வி, பத்தாம் வகுப்பு பொது தேர்வு எழுதும் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை கூறப்பட்டது. மேலும் நிகழ்ச்சியில் கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள், இளைஞர்கள், பள்ளி கல்லூரி, மாணவர்கள் பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள், கலந்து கொண்டனர். இறுதியில் வசந்த ராஜா கணித ஆசிரியர் நன்றியுரை கூறினார்கள் . நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்த நமது அறக்கட்டளைக்கு கிராமத்தின் பொதுமக்கள் மற்றும் பள்ளியின் சார்பாக நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.

# கேஎஸ்பி ரமேஷ் எம்எல்ஏ பிறந்தநாளை முன்னிட்டு ஸ்ரீ மணக்குள விநாயகர் கோவிலில் தங்கத்தேர் இழுப்பு



கதிர்காமம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் K.S.P.ரமேஷ் பிறந்தநாளை முன்னிட்டு, முத்துராமன் குடும்பத்தினர் தலைமையில் ஸ்ரீ மணக்குள விநாயகர் கோவிலில் சிறப்பு அபிசேகம் செய்து தங்கத்தேர் இழுக்கப்பட்டது. விழாவில் என்.ஆர்.காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், இளைஞர் அணி பொறுப்பாளர்கள், கதிர்காமம் தொகுதி மக்கள் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டனர். விழாவின் முடிவில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருள் வாங்குவோர், விற்பனையாளர் சந்திப்பு கூட்டம்



சேலம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை நேரடியாக மொத்த கொள்முதல் செய்பவர்களிடம் விற்பனை செய்யும் வகையில் நடைபெற்ற வாங்குவோர், விற்பனையாளர் சந்திப்பு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி முன்னிலையில் வாங்குவோர் விற்பனையாளர்களுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. உடன் கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி பொன்மணி, வேளாண்மை துறை இணை இயக்குனர் சிங்காரம், தோட்டக்கலை துறை துணை இயக்குனர் மஞ்சுளா, மாவட்ட வணிக சங்கத் தலைவர் பெரியசாமி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# மதுரையில் தவெக சார்பில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி




**மதுரை, மார்ச் 27-**

தவெகதிருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி சார்பில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைப்பெற்றது. மதுரை விளாச்சேரி பகுதியில் தமிழக வெற்றி கழகத்தின் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி சார்பில் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் திருநகர் மருது பாண்டியன் தலைமையிலும், நிர்வாகிகள் மதன், ரபிக், நஜீர் ஆகியோர் முன்னிலையில் ஈகை திருநாள் புனித ரமலான் பண்டிகையை முன்னிட்டு இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் இஸ்லாமிய மற்றும் அனைத்து மதம், சமூகத்தை சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், இந்நிகழ்ச்சி ஏற்பாட்டினை சங்கிஸ்கான், ரியால், கஜினி, முஹம்மது நிஜாம், யாவீர், ஒய்சல் கர்னி, முகமது, நயினார் முஹம்மது, ஆனந்த், அம்ஜித்கான், காஜா மைதீன், சிக்கந்தர், மாலிக், முகமது ஆதம், மாரநாடு மற்றும் கழகத்தைச் சார்ந்த நிர்வாகிகள், உறுப்பினர்கள், தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தனியார் பள்ளிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும்

## பூஜ்ஜிய நேரத்தில் சம்பத் எம்.எல்.ஏ., வலியுறுத்தல்



புதுச்சேரி, மார்ச் 27-

புதுச்சேரி சட்டப்பேரவையில் பூஜ்ய நேரத்தில் முதலியார் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் சம்பத் பேசியதாவது, புதுச்சேரியின் தமிழ்த்தாய் வாழ்த்து புதுச்சேரியில் பிறந்த புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசனால் எழுதிய 'இசை அமுது' என்னும் பாடல் தொகுப்பின் இரண்டாம் பகுதியின் முதல் பாடலான வாழ்வினில் செம்மையை செய்பவள் நீயே, மான் புகழ் நீயே என் தமிழ் தாயே எனத் தொடங்கும் பாடலை நமது புதுச்சேரியின் தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிவித்துள்ளோம்.

இந்தப் பாடல் அனைத்தும் மாணவச் செல்வங்களும் அறிந்திருக்க வேண்டும். அரசு விழாக்களில் இந்தப் பாடல் ஒலிக்கப்பட்ட பின்பு தான் நிகழ்ச்சி துவங்குகிறது.

அதை போல் அனைத்து பள்ளிகளிலும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் பள்ளி துவங்கும் முன் பாடப்பட வேண்டும்.

ஆனால், பல தனியார் பள்ளிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவது இல்லை. இப்படியே சென்றால் நமது அடுத்த தலைமுறை இளைஞர்களுக்கு தமிழ் தாய் வாழ்த்து எது என்பது கூட தெரியாமல் போய்விடும்.

எனவே, இனிவரும் காலங்களில் அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் காலையில் கூடும் இறைவணக்க கூட்டத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும் என்று அரசாணை இயற்ற வேண்டும். இதை மீறும் பள்ளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# புதுச்சேரி ஆளுநர் மாளிகையில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி




இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி புதுச்சேரி ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் இப்தார் நோன்பு விருந்து அளித்தார். முதலமைச்சர் ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், வேளாண் அமைச்சர் ஜெயக்குமார், குடிமைப்பொருள் வழங்கல் அமைச்சர் திருமுருகன், ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் சாய் ஜெ சரவணன்குமார், தலைமைச் செயலர் சரத் சௌகான், காவல்துறை தலைமை இயக்குனர் ஷாலினி சிங், அரசு செயலர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் வக்ஃபு வாரிய உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் 350க்கும் மேற்பட்ட இஸ்லாமிய சமூகத்தினர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# பாலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா




பாலூர், மார்ச் 27-

பண்ருட்டி வட்டம், பாலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு பள்ளி தலைமையாசிரியர் அன்னபூரணி தலைமையேற்று வரவேற்றார். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் செல்வராஜ் மற்றும் பள்ளி மேலாண்மை குழுத் தலைவி இளமதி முன்னிலை வகித்தனர். அரசு ப.சாந்தக்குமார், லயன் க.இளங்கோவன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, ஆசிரியர்களுக்கும் மார்ச்–2024ம் ஆண்டு பொதுத்தேர்வில் பள்ளி அளவில் முதல் மூன்று இடங்கள் பெற்ற மாணவர்களுக்கும் விருது, சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினர்.

10–வது, 11–வது, 12–வது பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி அளித்த ஆசிரியர்கள் ஆண்டு விழாவில் பாராட்டப்பட்டனர். உதவி தலைமை ஆசிரியர் சு. பழனிவேல் ஆண்டறிக்கை வாசித்தார். முதுகலை ஆசிரியா சக்திவேல் நன்றி கூறினார். தமிழாசிரியர் அம்சவள்ளி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை முதுகலை ஆசிரியர்கள் சித்ரா, மகாலட்சுமி, பரமேஸ்வரி ஓவிய ஆசிரியர் முத்துக்குமரன், தேவசேனா, கனகராஜ் வெங்கடேசன், பூபதி உட்பட ஆசிரியர்கள் செய்திருந்தனர். மாணவர்களும் பெற்றோர்களும் திரளாகக் கலந்துகொண்டனர்.

# உலக சாதனை படைத்த எலிசபெத் ராணி முதல்வர் ரங்கசாமியிடம் வாழ்த்து பெற்றார்



உலக பொம்மலாட்ட தினத்தை முன்னிட்டும், 76 வது குடியரசு தின விழாவை முன்னிட்டும் 76 நிமிடங்கள் தனிநபராக பல குரல் பேசி பொம்மலாட்டம் நிகழ்வை நடத்தி ஈச் உலக சாதனை படைத்து விருது பெற்ற புதுவை பொம்மலாட்ட கலைஞர் தன்னம்பிக்கை பொம்மலாட்ட கலைக்குழுவின் நிறுவனர் எலிசபெத் ராணி முதல்வர் ரங்கசாமியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# இலவச நீட் பயிற்சி வகுப்பு துவக்க விழா




தென்காசி, மார்ச் 27-

தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் மாநில அளவிலான இலவச போட்டித் தேர்வு மையம் தொடங்க உள்ளது. அதன் முதல் முயற்சியாக மே மாதம் நான்காம் தேதி நீட் தேர்வு எழுத இருக்கின்ற 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு யுஎஸ்பி மெட்ரிக் பள்ளியில் வைத்து இலவச நீட் பயிற்சி வகுப்புகள் நேற்று 26 ஆம் தேதி புதன்கிழமை காலை 10 மணி அளவில் தொடங்கப்பட்டது.

இப்பயிற்சி வகுப்புகள் இப்பள்ளியின் முதல்வர் அந்தோணி பால்ராஜ் ஆலோசனையின் பெயரில் பள்ளியின் ஆசிரியர்களால் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது. காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை வகுப்புகள் நடைபெறும். இப்பயிற்சி வகுப்புகள் துவக்க விழாவிற்கு தமிழ்நாடு நாடார் உறவின்முறை கூட்டமைப்பின் மாநில தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமை தாங்கினார். யுஎஸ்பி மெட்ரிக் பள்ளியின் முதல்வர் அந்தோணி பால்ராஜ் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே சிறப்புரை ஆற்றினார். அரசு பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயின்ற மாணவர்களுக்கு மட்டுமே இப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். அவர்களது மருத்துவ கனவு இப்பயிற்சி வகுப்புகளின் மூலம் நனவாகும் என்று யுஎஸ்பி மெட்ரிக் பள்ளியின் முதல்வர் அந்தோணி பால்ராஜ் மாணவர்களை வாழ்த்தியும் பாராட்டியும் பேசினார்கள். இந்த நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் மற்றும் சுப்பிரமணியன் குருசாமி நாடார் ஐயப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தவெக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு



விழுப்புரம், மார்ச் 27-

விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் தென்மேற்கு தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் தளபதி விஜய் உத்தரவின் பெயரில் கட்சியின் பொதுச்செயலாளர் ஆணைக்கிணங்க மாவட்ட செயலாளர் வடிவேல் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விக்கிரவாண்டி பொன்னங்குப்பம் கிளைக் கழக செயலாளர் பிரபு ஏற்பாட்டில் கோடை வெயிலின் தாக்கத்தினால் இளநீர், தர்பூசணி,மோர், ஜூஸ், தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார் மாவட்ட செயலாளர் வடிவேல். இந்நிகழ்ச்சியில் இணை செயலாளர் ரமேஷ் எ சக்திவேல், பொருளாளர் விஜய் தீப், இளைஞர் அணி அமைப்பாளர் பிரித்திவிராஜ், ஒன்றிய செயலாளர் பாரதி,பொன்னங்குப்பம் கிளை நிர்வாகிகள் கிளை கழக இணை செயலாளர் விக்கி, கிளை கழக பொருளாலர் பாபு,கிளை கழக துணை செயலாளர் ராஜா,கிளை கழக துணை செயலாளர் சிவமுருகன்,செயற்குழு உறுப்பினர்கள் பால முருகன், ரமேஷ்,சதீஷ்,தீனா பாலமுருகன், தேவாநேசபிரியான், பாரத்,திருநாவுக்கரசு, ராஜ்கிரின் மற்றும் கட்சித் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாலை எக்ஸ்பிரஸ்

# மாறிவரும் பருவ நிலைக்கு ஏற்ப உடல் ஆரோக்கியத்தை பராமரிக்க 7 நாள் சமச்சீர் ஆயுர்வேத உணவு முறை

## ஆயுர்வேத சிகிச்சை நிபுணர் டாக்டர் மதுமிதா கிருஷ்ணன் தகவல்



**கோவை, மார்ச் 27–**

குளிர்காலத்திலிருந்து வசந்த காலத்திற்கு (கோடை காலம்) நாம் மாறும் போது, பருவ கால ஏற்றத்தாழ்வுகளை தடுக்க நமது உடலுக்கான சமச்சீர் உணவின் முக்கியத்துவத்தை ஆயுர்வேதம் வலியுறுத்துகிறது. இந்த காலம் வாதம், பித்தம் மற்றும் கப தோஷங்களை ஏற்படுத்தி, நோய் பாதிப்பை ஏற்படுத்துகிறது. வெயில் மற்றும் கடும் வெப்பம் காரணமாக நமது உடலில் நீர் சத்து குறைந்து வறட்சி ஏற்பட்டு, அது சுவாசப்பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது. இதற்கிடையில், ஏற்ற இறக்கமான வெப்ப நிலை செரிமானத்தை பலவீனப்படுத்தி, நச்சு பொருட்களை உடலுக்குள் சேர்த்து, நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கிறது. இவற்றை தடுத்து உடலை ஆரோக்கியமாக பராமரிக்க 7 நாள் சமச்சீர் ஆயுர்வேத உணவு முறை அவசியம் என்று ஆயுர் வேத சிகிச்சை நிபுணர் டாக்டர் மதுமிதா கிருஷ்ணன் வலியுறுத்தி உள்ளார். இது குறித்து அவர் விரிவாக கூறுகையில், இந்தக்காலக் கட்டத்தில் ஆரோக்கியமாக இருக்க, சூடான, நன்கு சமைத்த உணவுகளை சாப்பிட வேண்டும். ஒரு ஆயுர்வேத நிபுணராக நான் வலியுறுத்துவது என்னவென்றால், வீட்டில் நெய், காய்கறி சூப்கள், பருவகால கீரைகள் மற்றும் ஒரு கைப்பிடிபாதாம் என இயற்கையாக புரதம் நிறைந்த உணவுகளை உங்கள் தினசரி உணவில் சேர்த்து கொள்ள வேண்டும். இந்த பருவத்தின் கணிக்க முடியாத தன்மையானது,காலையில் குளிராக துவங்கி மதிய வேளையில் கடும் வெப்பமாக மாறுகிறது. இதன் காரணமாக நாம் சமச்சீரான உணவு முறையை கடைபிடிப்பதில்லை. குளிர்ச்சியான பருவ நிலையில் எண்ணெயில் வறுத்த உணவுகளை நீங்கள் அதிகம் விரும்பலாம், அதே நேரத்தில் வெப்பநிலை அதிகரிக்கும் போது குளிர்ந்த பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம்களை நீங்கள் விரும்பிச் சாப்பிடலாம். மதிய உணவாக பலாக்பன்னீர் காய் கறியுடன் பஜ்ரா ரொட்டி, புதிய காய்கறி சாலட், மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் இயற்கை புரதம் மற்றும் ஆரோக்கியமான கொழுப்புகள் நிறைந்த ஒருகைபிடி கலிபோர்னியா பாதாம் இரவு உணவாக நெய், சீரகம் மற்றும் கருப்பு மிளகு சேர்த்து சமைத்த பாசிப்பருப்பு கிச்சடி, வேகவைத்த பீட்ரூட் மற்றும் கேரட் சப்ஜியுடன் சாப்பிட வேண்டும். இது இரவில் தசைமீட்புக்கு உதவும். நாள் 2 காலை உணவாக நார்ச்சத்து நிறைந்த வறுத்த பாதாமுடன் மசாலா ஓட்ஸ் கஞ்சியை ஒரு சிட்டிகை இஞ்சி மற்றும் இலவங்கப்பட்டை சேர்த்து சாப்பிட வேண்டும். மதிய உணவாக: ராஜ்மா கறியுடன் ஜீராஅரிசி, வதக்கிய கீரைகள் இரவு உணவாக கிராம்பு மற்றும் மிளகு போன்ற சாலாப்பொருட்களுடன் பஜ்ராகிச்சடி, பீட்ரூட்ரைத்தாவுடன் எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் உணவை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்து அவர் மேலும் கூறுகையில், உங்கள் தனிப்பட்ட தேவைகள் மற்றும் விருப்பங்களின் அடிப்படையில் மேற்கண்ட உணவுகளை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு நல்ல சம நிலையான உணவு என்பது இனிப்பு, புளிப்பு, உப்பு, கசப்பு, காரம் மற்றும் துவர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.இந்த எளிய ஆயுர் வேத உணவுத்திட்டத்தை பின் பற்றுவதன் மூலம், உங்கள் செரிமான மண்டலம் சிறப்பாக செயல்படுவதோடு, நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும்.உடலுக்கு ஆரோக்கியமான, ஊட்டமளிக்கும் உணவை சாப்பிடும் அதே வேளையில் பருவகால நோய் பாதிப்பில் இருந்தும் நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம் என்று டாக்டர் மதுமிதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

# சேலம் விநாயகா மிஷன் விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் விளையாட்டு விழா



**சேலம், மார்ச் 27–**

விநாயகா மிஷன் விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் மாணவ பேரவை அமைப்பின் மூலம் விளையாட்டு விழாவின் தொடக்க நிகழ்ச்சி பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் வழிகாட்டுதலின்படி நடத்தப்பட்டது .

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்து வரவேற்புரை வழங்கினார். பல்கலைக்கழகத்தின் புதுமைப் படைப்பு மற்றும் தொழில் முனைவோர் அமைப்பின் இயக்குனர் பேராசிரியர் முனைவர் ஞானசேகர் பங்கேற்று தலைமையுரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக அர்ஜுனா விருது பெற்ற பாரா ஒலிம்பிக்கில் வெள்ளி பதக்கம் வென்ற தடகள வீராங்கனை துளசிமதி முருகேசன் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார். சிறப்பு அழைப்பாளராக நடிகரும் அறம் செய்வோம் அறக்கட்டளையின் நிறுவனருமான ஜீவா ரவி பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார். கல்லூரியின் உடற்பயிற்சி இயக்குனர் முனைவர் ஜெயபாரதி இவ்வாண்டின் விளையாட்டு அறிக்கையினை வாசித்தார்.

விழாவின் தொடக்க நிகழ்வாக தேசிய மாணவப் படை அமைப்பின் அணிவகுப்புடன் மாணவர்களின் குழுவாரியான அணிவகுப்பு நடைபெற்றது. தொடர்ந்து ஒலிம்பிக் தீச்சுடர் ஏற்றப்பட்டு கொடியேற்றத்துடன் விளையாட்டு குழுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

பின்னர் கல்லூரியின் டீன் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து பலூன் மற்றும் புறாக்களை பறக்கவிட்டு போட்டிகளை ஆரம்பித்து வைத்தனர். தொடக்க விழாவின் முடிவில் மாணவர்கள் அனைவரும் உறுதி மொழியினையும் ஏற்றனர். இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் துறையின் உடற்கல்வி இயக்குனர்கள் முனைவர் ஜெயபாரதி சூர்யா மற்றும் நுண்கலை அமைப்பின் ஆலோசகர் உமா மகேஸ்வரி விக்னேஸ்வரா மற்றும் மாணவ பேரவை உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

# செவிலியர்களுக்கு பணி நிறைவு பாராட்டு விழா



**மதுரை, மார்ச் 27–**

மதுரை ராஜாஜி மருத்துவமனையில் கண்காணிப்பு நிலை செவிலியர்கள் மூன்று நபர்களுக்கு ஒரே நாளில் பணி நிறைவு பாராட்டு விழா நடைப்பெற்றது. 30 வருடங்கள் மருத்துவ துறையில் பணிபுரிந்து நோயாளிகளுக்கு சேவையாற்றி நற்பெயர் பெற்று பணி ஓய்வு பெறும் ஜான்சி ராணி, பிரபாவதி, கார்மேகம் ஆகியோர்களுக்கு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை கருத்தரங்கு கூடத்தில் பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் சக செவிலியர்கள், மருத்துவர்கள் மற்றும் பலர் நன்றி கூறி வாழ்த்துக்களை தெரிவித்தனர். பணி நிறைவு பெறும் செவிலியர்கள் பணி நாளில் பழைய நினைவுகளை பரிமாறிக் கொண்டனர்.

### கோரிக்கைகளை வலியுறுத்தி

# தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் பணிபுரியும் ஊழியர்கள் 4ம் நாளாக தொடர் வேலை நிறுத்தப் போராட்டம்



**காரைக்கால், மார்ச் 27–**

சம வேலைக்கு சம ஊதியம் மற்றும் பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் (NRHM) பணிபுரியும் ஊழியர்கள் இன்று 4ம் நாளாக தொடர் வேலை நிறுத்தம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் (NRHM), புதுச்சேரி மாநிலம் முழுவதும், பல்வேறு பிரிவுகளில் சுமார் 750 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் நிரந்தர ஊழியருக்கு இணையாக, அரசு மருத்துவத்துறையில் குறைந்த ஊதியத்தில், கடந்த 25 வருடங்களாக பணிபுரிந்து வருகிறார்கள். விலைவாசி உயர்வுக்கு ஏற்ப ஊதிய உயர்வு மற்றும் பணி நிரந்தரம் வழங்க வேண்டும் என பலமுறை வலியுறுத்தியும், கடந்த 15 ஆண்டுகளாக போராட்டம் நடத்தியும் மாநில அரசு இவர்களின் கோரிக்கையான சம வேலைக்கு சம ஊதியம் மற்றும் பணி நிரந்தரம் இவற்றிற்கு செவி சாய்க்கவில்லை என கூறப்படுகிறது.

இந்நிலையில் ஊழியர்களின் கோரிக்கைக்கு செவி சாய்க்காத புதுச்சேரி அரசை கண்டித்து, கடந்த 24ஆம் தேதி முதல், தொடர் வேலை நிறுத்த போராட்டத்தை துவங்கினர். புதுச்சேரி, ஏனம், மாகி மற்றும் காரைக்கால் ஆகிய 4 பிராந்தியங்களில், இன்று 4ம் நாளாக நாளாக ஊழியர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். காரைக்கால் மாவட்டத்தில், காரைக்கால் துணை இயக்குனர் அலுவலக வாயிலில் இப்போராட்டம் நேற்று மூன்றாவது நாளாக நடைபெற்று வருகிறது. ஊழியர்களின் இந்த போராட்டத்தால், வேக்சின் போடுதல், லேப் டெஸ்ட் மற்றும் நோயாளிகளை கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன, மேலும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் பற்றாக்குறையை சமாளிக்க திடீர் தற்காலிக ஊழியர்களை நடவடித்துறை நியமிக்க இருப்பதாக கூறப்படுகிறது. இதற்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். குறிப்பாக திடீர் தற்காலிக ஊழியருக்கு ஊதியம் வழங்காமல் அவர்கள் வேலை செய்ய மாட்டார்கள் அப்படி இருக்க அந்த ஊதியத்தை போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு வழங்குவதில் அரசுக்கு என்ன தடை இருக்கிறது என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# 31ந் தேதிக்குள் நியாய விலைக்கடைகளில் குடும்ப அட்டையில் உள்ள உறுப்பினர்கள் கைவிரல் ரேகையினை பதிவு செய்ய வேண்டும்

## திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் தகவல்



**திண்டுக்கல், மார்ச் 27–**

திண்டுக்கல் மாவட்டம் ஏஏஓய்(AAY) மற்றும் பிஎச்ச்(PHH) பயனாளிகளின் குடும்ப அட்டைகளில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தங்களது கைவிரல் ரேகையினை 31.03.2025 ஆம் தேதிக்குள் பதிவு செய்யப்பட வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் செயல்படும் நியாய விலைக்கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் பெறும் ஏஏஓய்(AAY) மற்றும் பிஎச்ச்(PHH) குடும்ப அட்டைகளில் உள்ள அனைத்து பயனாளிகள் தங்களது கைவிரல் ரேகை பதிவினை மீரிசீசி (electronic Know Your Customer) சம்மந்தப்பட்ட நியாய விலைக் கடையில் 31.03.2025க்குள் பதிவு செய்திட வேண்டும் என சென்னை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஏஏஓய்(AAY) மற்றும் பிஎச்ச்(PHH) பயனாளிகளின் குடும்ப அட்டைகளில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தங்களது கைவிரல் ரேகையினை 31.03.2025 ஆம் தேதிக்குள் பதிவு செய்யப்பட வேண்டும். எனவே, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஏஏஓய்(AAY) மற்றும் பிஎச்ச்(PHH) பயனாளிகளின் குடும்ப அட்டைகளில் உள்ள அனைத்து உறுப்பினர்கள் அத்தியாவசியப் பொருட்கள் பெறும் நியாய விலைக்கடைகளில் கைவிரல் ரேகை பதிவு செய்திட வேண்டும், என மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன் தெரிவித்துள்ளார்.

# கடுமையான கோடை வெப்பத்தை சமாளிக்க ‘தமிழகத்தைக் கூலாக மாற்றும் ஏசி சலுகைகள்’ என்ற புதிய திட்டம் ஃபிளிப்கார்ட் அறிமுகம்




திருச்சி, மார்ச் 27-

இந்தியாவின் உள்நாட்டு மின்வணிக தளமான ஃபிளிப்கார்ட், கடுமையான கோடை வெப்பத்தை சமாளிக்க குதூகல மூட்டும் அசத்தலான சலுகைகளை இணைத்து ‘தமிழகத்தைக் கூலாக மாற்றும் ஏசி சலுகைகள்’ என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 22 ஃபீட் டிரைபல் வோர்ல்டுவைடு நிறுவனத்தால் கருத்துருவாக்கம் செய்யப்பட்டுள்ள இந்த திட்டம், மிகைப்படுத்தப்பட்ட ஆனால் தொடர்புடைய சூழ்நிலைகள் மூலம் சுட்டெரிக்கும் வெப்பத்தின் தாக்கத்தை எடுத்துக்காட்டுகிறது ஃபிளிப்கார்ட்டின் குளிரூட்டும் தீர்வுகள் மிகவும் தேவையான நிவாரணத்தை வழங்கி வெப்பதான தருணங்களும் சிறந்த நிலைக்கு மாறுவதை இது காட்சிப்படுத்துகிறது. வெப்பம் உணர்ச்சிகளை தீவிரப்படுத்தும் அன்றாட சூழ்நிலைகளையும், எளிமையான குளிரூட்டும் தீர்வுகள் மிகவும் தேவையான நிவாரணத்தையும் வழங்குவதை இவை வெளிப்படுதுகின்றன. ஒரு படத்தில், தங்கள் மகனின் உதவித்தொகை அறிவிப்பை பற்றி அறியும் ஒரு குடும்பத்தின் உணர்ச்சி கொந்தளிப்பை படம் பிடித்துகாட்டுகிறது, ஆனால் அந்தவெப்பம்அந்தத ருணத்தை இன்னும் அதிகமாக உணரவைக்கிறது. மூன்றாவது படம், அதிகரித்து வரும் வெப்ப நிலையால் ஏற்படும் எரிச்சலால் ஒரு ஜோடியின் விடுமுறை திட்டம் எப்படி தடம் புரள்கிறது என்பதை நகைச்சுவையாக சித்தரிக்கிறது. இந்த திட்டம் மார்ச் 26 31 வரை நடைபெறும் பிளிப்கார்ட் கூலிங் டேஸுடன் இணைக்கப்பட்டுள்ளது, ரூ.26,490 முதல் தொடங்கும் 1.5 டன் ஏசிகள், ரூ.1,999 முதல் தொடங்கும் ஆற்றல் திறன் கொண்ட மின் விசிறிகள் மற்றும் ரூ.3,999 முதல் தொடங்கும் கூலர்கள் போன்ற தயாரிப்புகளை வழங்குகிறது. வரவிருக்கும் கோடை மாதங்களை இந்தியா எதிர்கொள்ள தயாராகி வருவதால், குளிரூட்டும் தீர்வுகளை மேலும் அணுகக்கூடியதாகவும் மலிவு விலையிலும் மாற்றுவதே இந்த விளம்பரப் பிரச்சாரத்தின் நோக்கமாகும். “ஃப்ளிப்கார்ட்டில், ‘தமிழகத்தைக் கூலாக மாற்றும் ஏசி சலுகைகள்” விளம்பரப் பிரச்சாரத்தின் மூலம், சிறந்த பொருட்களை தரமான சலுகைகள் மூலம் வழங்கி உண்மையான நுகர்வோர் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். ஃபிளிப்கார்ட் கூலிங் டேஸ் மூலம், நாடு முழுவதும் உள்ள வீடுகளுக்கு மலிவு விலையில், ஆற்றல் திறன் கொண்ட குளிரூட்டும் தீர்வுகளை மேலும் அணுகக்கூடியதாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். கவர்ச்சிகரமான பரிமாற்றச் சலுகைகள் மற்றும் நெகிழ்வான கட்டண விருப்பங்களுடன், சிறந்த பிராண்டுகளின் எங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு, தமிழக நுகர்வோரின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்துதடையற்ற, மதிப்பு சார்ந்த ஷாப்பிங் அனுபவத்தை உறுதி செய்கிறது” . குளிர்விக்கும் தீர்வுகளை மேலும் அணுகக்கூடியதாக மாற்ற, ஃபிளிப்கார்ட் 12 மாதங்கள் வரை கட்டணமில்லா இஎம்ஐ திட்டங்களையும் முன்னணி வங்கிகள் மூலம் உடனடி சேமிப்பையும் வழங்குகிறது.

கூடுதலாக, சூப்பர் காயின்ஸ் ஒப்பந்தங்கள் மற்றும் பரிமாற்ற சலுகைகள் மூலம், வாடிக்கையாளர்கள் அதிக நிதி நெகிழ்வுத்தன்மையை அனுபவிக்க முடியும் என்று ஃபிளிப்கார்ட்டின் சந்தைப்படுத்தல் மற்றும் ஊடகத் தலைவர் பிரதிக் ஷெட்டி கூறினார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி கிராமிய கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்





மதுரை, மார்ச் 27-

மதுரை, உசிலம்பட்டி திமுக நகர் கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு 600க்கும் மேற்பட்ட கிராமிய கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், 72வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள் அவரது பிறந்த நாளான கடந்த மார்ச் 1ஆம் தேதி முதல் திமுக நிர்வாகிகள் சார்பில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி நகர் கழக செயலாளர் எஸ்.ஓ.ஆர். தங்கப்பாண்டியன் ஏற்பாட்டில் கிராமிய கலைஞர்கள், கூலி தொழிலாளர்கள் என சுமார் 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவின் துவக்க விழாவாக 600க்கும் மேற்பட்ட கிராமிய கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா உசிலம்பட்டியில் உள்ள தனியார் மண்டப வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில், சிறப்பு விருந்தினராக மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மணிமாறன், உசிலம்பட்டி தொகுதி பொருப்பாளர் செல்லத்துரை மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். தொடர்ந்து வரும் 28ஆம் தேதி சலவை மற்றும் மருத்துவர் சமுதாய தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளும், 30ஆம் தேதி ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என உசிலம்பட்டி திமுக நகர் கழகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

# நண்பன் அறக்கட்டளை சார்பாக போக்குவரத்து காவலருக்கு பாராட்டு



கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் அருகே வீடு இன்றி தவித்த ஏழை குடும்பத்திற்கு வீடு கட்ட உறுதுணையாகவும், உதவிகளையும் செய்த போக்குவரத்து காவலர் ராஜதீபன் அவர்களை நண்பன் அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் முருகன், ஒருங்கிணைப்பாளர் OTR கணேசன் ஆகியோர் சந்தித்து சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தனர்,

# கோடையில் புத்துணர்ச்சி அளிக்க குவாலிட்டி வால்சின் உலகளாவிய ட்விஸ்டர் பிராண்ட் ஐஸ்கிரீம் -இந்தியாவில் அறிமுகம்




கோவை, மார்ச் 27-

இந்தியாவில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரிடமும் மிகுந்த வரவேற்பை பெற்ற ஐஸ்கிரீம் மற்றும் உறைநிலை இனிப்புகளுக்கு புகழ்பெற்ற குவாலிட்டி வால்ஸ், இந்த கோடை காலத்தை அனைவரும் புத்துணர்ச்சியுடன் கொண்டாடும் வகையில் தனது உலகளாவிய ட்விஸ்டர் பிராண்ட் ஐஸ்கிரீமை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது. தனித்துவமான மூன்று அடுக்குகளைக் கொண்ட இந்த குச்சி ஐஸ் இரண்டு அற்புதமான சுவைகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கடியிலும் அதன் வித்தியாசமான சுவைகள் நம்மை மெய்மறக்கச் செய்யும். யூனிலீவரின் பிரபல பிராண்டான ட்விஸ்டர், 25க்கும் மேற்பட்ட நாடுகளில் அனைவராலும்விரும்பப்படும் பிராண்டாக உள்ளது. ட்விஸ்டர் மேங்கோ இதில் மாம்பழம் மற்றும் கிரீமி வெண்ணிலா மற்றும் புளிப்பான ஸ்ட்ராபெரி உடன் 3 அடுக்குகளைக் கொண்டுள்ளது.

இதேபோல் ட்விஸ்டர் பைனாப்பிள் புளிப்பான ஸ்ட்ராபெரியைச் சுற்றி கிரீமி அன்னாசிப்பழம் மற்றும் புளிப்பு எலுமிச்சை ஆகியவற்றுடன் 3 அடுக்களைக் கொண்டுள்ளது. புதுப்புது சுவையைத் விரும்பும் இளைஞர்களை கவரும் வகையில் இந்த ட்விஸ்டர் தயாரிக்கப்படுகிறது! இது உண்மையான பழச்சாறு மற்றும் மூன்று அடுக்கு ஜிங் கொண்டு தயாரிக்கப்படுகிறது; இளைஞர்களை மகிழ்விக்கும் விதமாக தனித்துவமான வடிவத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்த குச்சி ஐஸ்சில், 65க்கும் குறைவான கலோரிகளே உள்ளது. கோடையை மேலும் மகிழ்விக்கும் வகையில், குவாலிட்டி வால்ஸ் இந்தியாவில் முதன்முறையாக புதிய விளம்பரத்தை வெளியிடுகிறது, இதில் நுகர்வோர் ‘30 லட்சம் இலவச ஐஸ் மிட்டாய்களை’ வெல்லலாம்.குவாலிட்டி வால்ஸ் சமீபத்தில் ட்விஸ்டருக்கான புதிய மல்டிமீடியா விளம்பரத்தையும் வெளியிட்டுள்ளது. மேலும் கூடுதலாக, இந்த சலுகை குறித்து நுகர்வோரை உற்சாகப்படுத்த ஒரு வேடிக்கையான மற்றும் கண்கவர் நுகர்வோர் விளம்பரமும் விரைவில் வெளியிடப்படும் என்றும் இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்துஸ்தான் யூனிலிவர் நிறுவனத்தின் ஐஸ்கிரீம் வணிகப் பிரிவுத் தலைவர் டோலோய் தான்ரிடாக்லி கூறுகையில்,எங்கள் புகழ்பெற்ற உலகளாவிய பிராண்டுகளில் ஒன்றான ட்விஸ்டரை இரண்டு அற்புதமான மற்றும் புத்துணர்ச்சியூட்டும் சுவைகளில் இந்தியாவிற்குக் கொண்டுவருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கோடை காலத்தில் மக்கள் வித்தியாசமான சுவை மிகுந்த சிற்றுண்டிகளை அதிகம் தேடுகிறார்கள்.

எங்கள் நிறுவனத்தின் அதிகம் விற்பனையாகும் பிராண்டாகவும், உலக அளவில் உள்ள மக்கள் அதிகம் விரும்பும் பிராண்டாகவும் இருக்கும் ட்விஸ்டர் மூலம், இந்த கோடை காலத்தில் இந்திய இளைஞர்களுக்கு புத்துணர்ச்சி அளிக்க இருக்கிறோம். மேலும் எங்களின் தனித்துவமான கோடைகால விளம்பரமும் மிகுந்த வரவேற்பை பெறும் என்று தெரிவித்தார்.

# உலக தண்ணீர் தின விழா




கோவை, மார்ச் 27-

கோவை மாவட்டம் காரமடை வட்டம் தாயனூரில் உலக தண்ணீர் தினத்தையொட்டி கூடு தன்னார்வ தொண்டு நிறுவனமும், கோவை ஐ.டி.சி நிறுவனமும் இணைந்து தண்ணீர் தின திருவிழா கொண்டாடப்பட்டது. இதில் விவசாயிகளுக்கான வேளாண் பொருட்காட்சி நடைபெற்றது. விழாவில் விவசாய குழுக்களுக்கு வேளாண் இயந்திரங்கள் வழங்கப்பட்டது. தண்ணீர் தின விழாவையொட்டி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தண்ணீர் சம்பந்தமான ஓவிய போட்டி நடத்தி பரிசு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சிக்கு கூடு தன்னார்வ தொண்டு நிறுவன செயலாளர் கதிரேசன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று வேளாண் கண்காட்சி திறந்து வைத்தார். கோவை ஐ.டி.சி பி.எஸ்.பி.டி தலைவர் முரளி, ஐ.டி.சி. பி.எஸ்.பி.டி நிர்வாக தலைவர் மஹிந்தர் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஐ.டி.சி ஒலி மயமான எதிர்கால திட்ட மேலாளர் மனிஷ் குமார், மேட்டுப்பாளையம் வேளாண் உதவி இயக்குனர் பாக்கியலட்சுமி, கே.வி.கே வேளாண் விஞ்ஞானி சுரேஷ்குமார், காரமடை உதவி செயற்பொறியாளர் நிவேதா, கூடு தன்னார்வ தொண்டு நிறுவன நிர்வாகி யுவராஜ், கெம்மாரம்பாளையம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் செல்வி நிர்மலா, துணைத் தலைவர் ரங்கராஜ் உள்பட சுற்றுவட்டார விவசாயிகள் 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# வருவாய்த்துறை அலுவலர்களுக்கு மாதாந்திர பணி ஆய்வுக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வருவாய்த்துறை அலுவலர்களுக்கான மாதாந்திர பணி ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் சிவசுப்பிரமணியன் (நில எடுப்பு உடன்குடி), சங்கரலிங்கம் (சிப்காட்), லொரைட்டா (நெடுஞ்சாலை), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சேதுராமலிங்கம், தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் ம.பிரபு மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
● வியாழன் ● மார்ச் 27, 2025

# எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில் திறன் மேம்பாட்டு பயிற்சி: கவர்னர் துவக்கி வைப்பு



புதுச்சேரி, மார்ச் 27-

புதுச்சேரி எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில், எய்ட்ஸ் பற்றி திறன் மேம்பாட்டு பயிற்சியை கவர்னர் கைலாஷ்நாதன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். தனியார் ஓட்டலில் நடந்த எச்.ஐ.வி., எய்ட்ஸ் குறித்து, திறன் மேம்பாட்டு பயிற்சியை கவர்னர் கைலாஷ்நாதன் துவக்கி வைத்தார். சுகாதாரத்துறை செயலர் ஜெயந்த் குமார் ரே வரவேற்றார். அமைப்பின் துணை இயக்குனர் அனுப்குமார் பூரி நோக்கவுரை வழங்கினார்.

எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடையும் வகையில், நோய் பரவும் முறை, அதனை தடுக்கும் முறைகள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. சங்கத்தின் மூலம், தொலைக்காட்சி, வானொலி, சமூக வலைதளங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையில், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்நிகழ்ச்சியில், சுகாதாரத்துறை இயக்குனர் ரவிச்சந்திரன், மருத்துவ கண்காணிப்பாளர் செவ்வேள், மருத்துவர்கள் உதயசங்கர், ஐயப்பன், இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, ஷிவானி, காங்கேயன் உட்பட பல்வேறு கல்லூரிகளின் முதல்வர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கால்நடை வளர்ப்போர் விபத்தில் இறந்தால் ரூ.5 லட்சம், நிரந்தர ஊனம் ஏற்பட்டால் ரூ.2 லட்சம் நிவாரணம்

## சட்டப்பேரவையில் அமைச்சர் தேனீ.ஜெயக்குமார் அறிவிப்பு



புதுச்சேரி, மார்ச் 27-

புதுச்சேரி சட்டசபையில் மானிய கோரிக்கை மீதான விவாத்தில் எம்.எல்.ஏ.,க்கள் கேள்விகளுக்கு, வேளாண் துறை அமைச்சர் தேனீ. ஜெயக்குமார் பதில் அளித்து பேசியதாவது, விவசாயிகளுக்கான இன்சூரன்ஸ் திட்டத்தில் பாம்பு கடி, மின்சாரம் தாக்கி இறந்தவர்களுக்கும் ரூ.5 லட்சம் இன்சூரன்ஸ் வழங்க அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்த இன்சூரன்ஸ் பிரிமியம் அரசே செலுத்தும். விபத்தில் காயம் அடைந்தால் ரூ.2 லட்சம் வழங்கப்படும். அனைத்து விவசாயிகளுக்கும், பயிறு வகைகளுக்கும் மானியம் ரூ.1000 உயர்த்தி வழங்கப்படும்.

அதிக மகசூல் தரக்கூடிய நெல் சாகுபடிக்கு ஏக்க ருக்கு பொது பிரிவினருக்கு (இரண்டு பருவம்) ஊக்க தொகை ரூ.5,000 இருந்து ரூ.6,000 ஆகவும், அட்டவணை பிரிவினருக்கு ரூ. 10 ஆயிரத்தில் இருந்து ரூ. 12 ஆயிரம், பாரம்பரிய நெல் சாகுபடிக்கு பொது பிரிவினருக்கு (2 பருவம்) ரூ.8 ஆயிரத்தில் இருந்து ரூ.9,000; அட்டவணை பிரிவினருக்கு ரூ.16 ஆயிரத்தில் இருந்து ரூ.18 ஆயிரமாக உயர்த்தப்படும்.

விவசாயிகள் மின் தேசிய வேளாண் விற்பனை சந்தை (இநாம்) யில் விளைபொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக மதகடிப்பட்டு மற்றும் கூனிச்சம்பட்டு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் சுமார் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் இ நாமில் இணைக்கப்படும்.

விவசாயிகள் பல்வேறு வேளாண் திட்டங்களின் பயன் பெறவும், விவசாய கடன் பெற வசதியாக 'ஸ்மார்ட் கார்டு' வழங்கப்படும். கால்நடைத் துறையில் காலி பணியிடங்கள் அனைத்தும் தகுதி அடிப்படையில் நிரப்பப்படும்.

முதல்வரின் விவசாய நிலம் இல்லாத கால்நடை வளர்ப்போர் காப்பீட்டு திட்டம், புதுச்சேரி அரசால் செயல்படுத்தப் பட உள்ளது. இதன் மூலம் கால்நடை வளர்ப்போர் விபத்தில் இறந்தால் ரூ.5 லட்சமும் மற்றும் விபத்து மூலம் நிரந்தர ஊனம் ஏற்பட்டால் ரூ.2 லட்சமும் நிவாரணமாக வழங்கப்படும்.

இரவு நேரங்களில், சாலைகளில் நாய்களால் ஏற்படும் விபத்தை தடுக்க தன்னார்வ தொண்டு நிறு வனங்கள் மூலம் ஒளிரூட்டும் கழுத்து பட்டை கள் பொருத்தப்படும். அனைத்து செல்லப்பிராணிகளுக்கும் மைக்ரோ சிப் பொருத்த ஆவணம் செய்யப்படும். நரம்பியல் ரீதியாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கும் மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்படும். மாற்றுத் திறனாளிகள் இறந்தால், அவர்களின் இறுதி சடங்கிற்கு வழங்கும் உதவித் தொகை ரூ.25 ஆயிரமாக உயர்த்தப்படும்.

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை 1 முதல் 5ம் வகுப்பு வரை ஆண்டுக்கு ரூ. 1,000ல் இருந்து ரூ.4,000 ஆகவும், 6 முதல் 8ம் வகுப்பு வரை ஆண்டுக்கு ரூ.2,000ல் இருந்து ரூ. 6,000 ஆகவும், 9 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ரூ.3,400ல் இருந்து ரூ. 6,400 ஆக உயர்த்தப்படும்.

இளநிலை பட்டம் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.5000ல் இருந்து ரூ.8000 ஆகவும், முதுகலை மாண வர்களுக்கு ரூ.6,800ல் இருந்து ரூ.9,800 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஆதரவற்ற விதவை பெண் மகள் திருமண உதவித்தொகை ரூ. 30 ஆயிரத்தில் இருந்து ரூ.40 ஆயிரமாகவும், மணப்பெண்ணின் பெற்றோருக்கு வழங்கும் நிதி உதவி ரூ. 35 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

ஒன்று, இரண்டு பெண் குழந்தைகளுடன் குடும்ப கட்டுப்பாடு செய்துகொண்ட பெற்றோருக்கு அளிக்கும் நிதி உதவி ரூ. 50 ஆயிரமாகவும், ஏழை பெற்றோர்களின் குடும்பத்தில் 8ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயி லும் ஒரே பெண் குழந்தைகளுக்கு உதவித்தொகை ரூ. 40 ஆயிரமாகவும், விதவை மறுமணத்துக்கான நிதி உதவி வழங்கும் திட்டத்தில் ரூ. 75 ஆயிரம் வழங்கப்படும்.

அனைத்து அங்கன்வாடி குழந்தைகள் வாரத்தில் 3 முட்டை, கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஒரு முட்டை வழங்கப்படுகிறது. வரும் காலத்தில் தினமும் 1முட்டை வீதம் வாரம் 6 முட்டைகள் வழங்கப்படும்.

பால் உற்பத்தியை பெருக்க கறவை பசு வைத்துள்ள விவசாயிகளுக்கு நூறு சதவீத மானியத்தில் (ரூ. 60 ஆயிரம்) ஒரு கறவை பசு வழங்கப்படும். கூட்டுறவு சங்க உறுப்பினர் அல்லாத விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் கால்நடை மற்றும் கன்று தீவனம் வழங்கப்படும்.

ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரியில் முதுநிலைப் பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை உயர்த்தி வழங்கப்படும்.

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மணப்பெண்ணின் பெற்றோருக்கான நிதியுதவி ரூ. பத்தாயிரம் உயர்த்தி வழங்கப்படும். விதவை மறுமணத்திற்கு ரூ. 75 ஆயிரம் வழங்கப்படும். காலியாக உள்ள அங்கன்வாடி ஊழியர்கள் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

காரைக்கால், மாகி, ஏனாம் பகுதிகளில் முதியோர் மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகையை புதுவை இயக்குநர் அலுவலகம் மூலம் வழங்கப்படும். மாநில தேசிய விளையாட்டில் பங்கேற்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை வழங்கப்படும். மாற்று திறனாளிகளின் இறுதிச்சடங்கு உதவித்தொகை ரூ.15 ஆயிரத்திலிருந்து ரூ. 20 ஆயிரமாக வழங்கப்படும்.

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை உயர்த்தி வழங்கப் படும். தொண்டு நிறுவனங்களுக்கான பராமரிப்பு தொகை ரூ. 500 ல் இருந்து ரூ. 1000 உயர்த்தி வழங்கப்படும். மாற்றுத்திறனாளி சாதாரண நபரை திருமணம் செய்தால் திருமண உதவித்தொகை ரூ. ஒரு லட்சத்தில் இருந்து ரூ. 1.50 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இருவரும் மாற்றுத்திறனாளிகளாக இருந்தால் திருமண உதவித்தொகை ரூ 2.50 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும். மாற்றுத் திறனாளி கடன் தொகை தள்ளுபடி செய்யப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# புதுச்சேரி – ஏனாம் நகரத்திற்கு குப்பை கிடங்கு அமைக்க அரசு நிலம் ஏற்பாடு செய்ய வேண்டுகோள்

## குப்பைகளுடன் வாகனங்கள் சாலையில் நிறுத்திவைப்பு





புதுச்சேரி, மார்ச் 27-

ஏனாம் நகரம், இயற்கை சீற்றங்களுக்கு ஆளாகியிருந்தாலும், கழிவுகள் குவியும் இடமாக மாறி உள்ளது.

கடந்த ஒரு மாதமாக, ஏனாம் நகரில் குவிந்துள்ள கழிவுகளை வெளியேற்றுவது தொடர்பான நிலைமை, கொட்டும் இடம் இல்லாததால் கணிசமாக மோசமடைந்துள்ளது. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் தினசரி குப்பை சேகரிப்பு மற்றும் வடிகால் ஏனாம் சாலைகளில் கொட்டப்படுகிறது. நகராட்சி கழிவுகளை அகற்றுவதற்கு பொருத்தமான இடத்தை அடையாளம் காண புதுச்சேரி அரசு ஏனாம் நகராட்சி ஆணையருக்கு பலமுறை உத்தரவு பிறப்பித்த போதிலும், சூழ்நிலையின் தீவிரம் பெரும்பாலும் கவனிக்கப்படவில்லை. இதன் விளைவாக, ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை (ISWM) சலுகை நிறுவனமான பிஸி சதுக்கம், சேகரிக்கப்பட்ட நகராட்சி திடக்கழிவுகள் மற்றும் வடிகால் சேற்றை அகற்றுவதில் கணிசமான சவால்களை எதிர்கொள்கிறது, மேலும்

ஒவ்வொரு நாளும் 24 மெட்ரிக் டன் குப்பை சேகரிப்பு இலக்கை இழப்பதன் மூலம் பெரும் நிதி இழப்பையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

டிசம்பர் 8, 2023 அன்று, புதுச்சேரி அரசு, யானம், மேட்டகூருவில் உள்ள மின்சார துணை மின் நிலையத்திற்கு அருகிலுள்ள 3.56 ஏக்கர் புரம்போக்கு நிலத்தை ஏனாம் நகராட்சிக்கு கடித எண். 768/ED/AEY/F.1/2023-24 இன் படி ஒதுக்கியது. இருப்பினும், HR ஸ்கொயர் தேவையான கழிவு பதப்படுத்தும் வசதியின் கட்டுமானத்தைத் தொடங்க முயன்றபோது, உள்ளூர்வாசிகள் துப்புரவு ஊழியர்களை அச்சுறுத்தியுள்ளனர். மேலும் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்ட வாகனங்களுக்கு தீ வைக்க முயன்றுள்ளனர்.

கழிவுகளை கொட்டும் நெருக்கடிக்கு உடனடி தீர்வு காண எழுத்துப்பூர்வ கோரிக்கைகளை சமர்ப்பித்து, HR ஸ்கொயர் பல முறை ஏனாமில் உள்ள அரசு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. தெருக்களில் குப்பைகள் தொடர்ந்து குவிந்து வருவதால், குப்பை கொட்டும் தளத்தை அடையாளம் காண வேண்டிய அவசரத் தேவையை வலியுறுத்த HR ஸ்கொயர்த்தின் நிர்வாகம் உள்ளூர் நிர்வாகத் துறையின் இயக்குநர் மற்றும் செயலாளரை நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளது.

இந்த அத்தியாவசியமான மக்கள் பிரச்சினையில் அரசு அதிகாரிகள் காட்டும் அக்கறையின்மை, ஏனாம் பகுதி முழுவதும் உள்ள சாலைகள் குடியிருப்பு மற்றும் வணிகச் வளாகம் அருகில் கழிவுகளால் நிரம்பியுள்ளன, இது பொதுமக்களுக்கு சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதார அபாயத்தை உருவாக்கியுள்ளது. இந்த நிலைமையானது தேவையற்ற நிகழ்வாக உள்ளது. அங்கீரிக்கப்பட்ட குப்பை கொட்டும் பகுதி இல்லாததால், உள்ளூர் சாலைகளில் குப்பைகள் சேர்வதற்கு வழிவகுத்தது, இது கடுமையான சுகாதார அபாயங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தொடரும் நெருக்கடிக்கு பதிலளிக்கும் விதமாக, ஏனாம் குடியிருப்பாளர்கள், அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தை கடந்த 21 ஆம் தேதி வெள்ளிக்கிழமை தன்னார்வலர்கள் முழு அடைப்பில் பங்கேற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தங்கள் குறைகளைத் தெரிவித்ததாக அதிமுக கட்சியினர் வலியுறுத்தியுள்ளது.

ஏராளமான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் அதிகரித்து வரும் பொதுமக்களின் அதிருப்தி இருந்தபோதிலும், அதிகாரிகளிடமிருந்து நடவடிக்கை இல்லாததைக் காண்பது வருத்தமளிக்கிறது. தீர்வு காண எழுத்துப்பூர்வ கோரிக்கைகளை சமர்ப்பித்து, HR ஸ்கொயர்பல முறை ஏனாமில் உள்ள அரசு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. தெருக்களில் குப்பைகள் தொடர்ந்து குவிந்து வருவதால், குப்பை கொட்டும் தளத்தை அடையாளம் காண வேண்டிய அவசரத் தேவையை வலியுறுத்த HR ஸ்கொயர் நிர்வாகம் உள்ளூர் நிர்வாகத் துறையின் இயக்குநர் மற்றும் செயலாளரை நேரில் சந்தித்து வலியுறுத்தி யுள்ளது.

# ஆலோசனைக் கூட்டம்



விழுப்புரம், மார்ச் 27-

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் நடைபெறவுள்ள அமாவாசை திருவிழா மற்றும் திருவக்கரை அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோவிலில் நடைபெறவுள்ள பௌர்ணமி திருவிழாவை முன்னிட்டு, திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தருவது குறித்த முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோவிலில் 29.03.2025அன்று அமாவாசை திருவிழாவும் மற்றும் 12.04.2025 அன்று திருவக்கரை சந்திரமௌலீஸ்வரர் திருக்கோவில் பௌர்ணமி ஜோதி திருவிழாவும் நடைபெறவுள்ளது. எனவே, பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் சாமி தரிசனம் மேற்கொள்ள ஏதுவாக ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில், அடிப்படை வசதிகளான குடிநீர் வசதிகள், தற்காலிக கழிவறைகள், வள்ளலார் மடம், தற்காலிக பேருந்து நிலையங்கள், திருக்கோவிலுக்கு வரும் வழிகளில் அதிகளவில் குப்பைதொட்டிகளை அமைத்து, குப்பைகளை உடனுக்குடன் அகற்றிட துப்புரவு பணியாளர்களை பணியமர்த்த வேண்டும்.

மேலும், காவல்துறை சார்பில், பாதுகாப்பு நடவடிக்கையாக பாதுகாப்பு ஒத்திகை நடத்துவதுடன், தற்காலிக பேருந்துநிலையங்கள், கிராம தெருக்கள், திருக்கோயில் வளாகம் மற்றும் இதர இடங்களில் திருட்டு, வழிப்பறி மற்றும் அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறாத வண்ணம் போதிய அளவில் காவலர்களை நியமித்து பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். ஊஞ்சல் உற்சவம் நடைபெறும் நேரத்தில் திருக்கோயிலின் ஊஞ்சல் மண்டபம் (ம) கிழக்கு மண்டபத்தின் மேற்பகுதியில் எவரும் ஏறாத வகையில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளவேண்டும். மேலும், கனரக வாகனங்கள் திருவிழா நாட்களில் செல்லாதவாறு கண்காணித்திட வேண்டும். திருக்கோயில் வளாகங்களில் தற்காலிக கடைகள் ஏற்படுத்துவதை தடுத்திட வேண்டும். திருவிழா நடைபெறும் நாளுக்கு முதல் நாளே மாலை முதல் வாகளங்கள் திருக்கோயிலுக்கு வருவதை தடுத்திட வேண்டும்.

மின்சார வாரியத்தின் சார்பில், திருக்கோயிலில் உள்ள மின் வழித்தடங்களை பார்வையிட்டு, சரிசெய்திட வேண்டும். மேலும், திருவிழா நாட்களில், சுழற்சி முறையில் மின் பணியாளர்கள் 24 மணிநேரமும் பணியில் இருப்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும். வாகனம் நிறுத்து மிடங்களில் போதிய மின்விளக்கு வசதி ஏற்படுத்திட வேண்டும்.

மேலும், திருக்கோவில் நிர்வாகம் சார்பில், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் கண்காணிப்புகேமரா அமைத்து கண்காணிக்கும் பணிகளில் ஈடுபட வேண்டும். ஆங்காங்கே குடிநீர் வசதிகள், தற்காலிக கழிப்பறை வசதிகள், கூட்டநெரிசலை தவிர்த்திடும் பொருட்டு தடுப்புக்கட்டை வசதிகளை அமைத்திட வேண்டும். திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு பாதை வசதிகள் மற்றும் திசைகள் அறிந்து கொள்ளும் வகையில் தேவையான இடங்களில் வரைபலகைகள் (Route Map Boards) அமைத்திட வேண்டும். திருக்கோவில் வளாகத்தினை தூய்மையாக பராமரித்திட வேண்டும்.

தீயணைப்பத்துறை சார்பில், திருக்கோயில் வளாகத்தில் தீயணைப்பு வாகனம் மற்றும் தீயணைப்பு வீரர்கள் தொடர் பணியில் ஈடுபட வேண்டும். போக்குவரத்துறை சார்பில், சிறப்பு பேருந்துவசதி ஏற்படுத்துவதோடு சாலை ஓரங்களில் நிறுத்தாமல், தற்காலிக பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் மட்டுமே பேருந்து நின்று செல்வதை உறுதிசெய்து கொள்ளவேண்டும். நெடுஞ்சாலைத்துறை சார்பில் அனைத்து இணைப்பு சாலைகளையும் இருவழிசாலையாக மாற்றிட வேண்டும். இப்பாதைகளில் கனரக வாகனங்கள் செல்வதை தடுத்து நிறுத்திட வேண்டும்.

சுகாதாரத்துறைசார்பில், சுகாதார மருத்துவகுழுவுட அவசர ஊர்தியுடன் திருக்கோவில் வளாகத்திற்குட்பட்ட இரண்டு இடங்களில் மருத்துவ முகாம் அமைக்க வேண்டும். உணவுத்துறை சார்பில், திருவிழா நடைபெறும் காலங்களில் திருக்கோவிலுக்கு வெரியே உள்ள உணவகங்களில் விற்கப்படும் உணவுபொருட்களை ஆய்வு செய்து, தரமான உணவுப்பொருட்கள் விற்பனை செய்வதை உறுதி செய்துகொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சரவணன் மாவட்ட வருவாய் அலுவலர் அரிதாஸ், திண்டிவனம் சார் ஆட்சியர் திருதிவ்யான்ஷு உதவி காவல் கண்காணிப்பாளர் ரவீந்திர குமார் குப்தா மாவட்ட ஆட்சியரின் தேர்முக உதவியாளர் (பொது) (பொ) தமிழரசன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007

# தமிழக சட்டசபையில் வக்பு திருத்த மசோதாவுக்கு எதிராக தீர்மானம்



# 11 மீனவர்களை சிறைபிடித்த இலங்கை கடற்படை

# மீண்டும் ஏறுமுகத்தில் தங்கம் விலை


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 27-3-2025 வியாழக்கிழமை •பக்கம் 8 • ரூ.600 காசுகள்